ஸ்ரீராமஜயம்.

வால்மீகி ராமாயண வசனம்.

ஆரணியகாண்டம்

இது

பண்டித - நடேச சாஸ்திரியாரால்

தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

சென்னை:

வெ. கல்யாணராம ஐயர்.

1905.

PRINTED AT THE LAWRENCE ASYLUM STEAM PRESS, MADRAS:
1905.

ஸ்ரீரஸ்து.

ஆரணிய காண்டம்.

விஷய சூசிகை.

சருக்கம்.	விஷயம்.	பக்கம்.
1.	இராமர் தண்டகாரணியத்தில் பிரவேசித்து அவ்விடத்தில் வசித்துக்கொண்டிருந்த முனிவர்களிடமிருந்து மரியாதைபெற்றது...	1
2.	இராமர் தண்டகாரணியத்தில் விராதன் என்ற அசுரனைக் காணல்	4
3.	விராதன் யுத்தம்	7
4.	விராதன் வதை	10
5.	சரபங்கமகரிஷியை இந்திரன் பிரமலோகத்துக் கழைக்கவந்தது	13
6.	சரபங்கமகரிஷியின் ஆச்சிரமத்தி லிருந்த ரிஷிகளெல்லோரும் இராமரைச் சரணமடைந்து ராக்ஷஸர்களின் உபத்திரவத்தை நீக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ளல்	18
7.	இராமர் சுதீக்ஷணருடைய ஆச்சிரமத்துக்குச் சென்றது	22
8.	தண்டகாரணியத்திலிருந்த ஆச்சிரம சமூகத்தை இராமர் பார்ப்பதற்காகப் புறப்படுதல்	24
9.	இராக்கதர்களை வதைக்க இராகவர் செய்த பிரதிக்ஞை விஷயமாகச் சீதை செய்துகொண்ட விண்ணப்பம்	26
10.	சரணமென்று தம்மையடைந்த முனிவர்களைக் காப்பாற்றும்பொருட்டு அவர்க	

சருக்கம்.	விஷயம்.	பக்கம்.
	ளுக்கு உபத்திரவம்பண்ணும் அரக்கர் களை வதைப்பதில் தருமவழுவில்லை யென்று இராமர் சொல்லுதல் ...	31
11.	அநேக ஆச்சிரமங்களைப் பார்த்துக்கொண்டு சுதீக்ஷ்ணரிடம இராமர் திரும்பிவந்து அகஸ்தியருடைய ஆச்சிரமத்தைப்பற்றி விசாரித்தலும் அவர் மகிமையை லக்ஷ் மணருக் கெடுத்து உரைத்தலும் ...	34
12.	இராமர் அகஸ்தியரைச் சந்தித்து அவரிட மிருந்து விஷ்ணுபாணம் வாள் முதலிய வைகள பெறுதல்	44
13.	இராமர் பஞ்சவடிக்குப் புறப்படுதல் ...	48
14.	இராமர் ஜடாயுவைக் கண்டது	51
15.	இராமர் பஞ்சவடியில் ஆச்சிரமம அமைத்து அவ்விடத்தில் கொஞ்சக்காலம் வாசம் பண்ணியது	55
16.	ஒருநாள பிராதக்காலத்தில் ஸ்நானம் பண் ணக் கோதாவரிசருச் சென்றபொழுது லக்ஷ்மணர் அககாலத்து ஹேமந்தருது வை வருணித்தல், இராமர் பரதரைப் பார்க்க ஆசைப்படல்	58
17.	பஞ்சவடியில் சூர்பபணகை இராமாதிகளைச் சந்தித்தல்	63
18.	சூர்ப்பணகை மூக்குங்காதும் அறுபட்டது...	66
19.	இராமரைக் கொல்லக் கரன பதினன்கு ராக்ஷசத்தலைவர்களை அனுப்பியது ...	69
20.	இராமர் தம்மைக் கொல்லவந்த பதினன்கு ராக்ஷசத்தலைவர்களையும் வதைத்தல் ...	72
21.	பதினன்கு ராக்ஷசதலைவர்களும் மாண்ட செய்தியைக் கரன் தனது தங்கையிட மிருந்து தெரிந்துகொளளல்	74

சருக்கம்.	விஷயம்.	பக்கம்.
22.	கரன் பதினாலாயிரம் ராக்ஷசர்களுடன் யுத்தத்திற்குச் சென்றது	77
23.	கரன் படையெழுந்தபொழுது உண்டான அபசகுனங்கள்	79
24.	கரன் சேனை வரக்கண்ட இராமர் சீதையை அழைத்துக்கொண்டு குகைக்குள் சென்றிருக்கும்படி லக்ஷ்மணருக்குக் கட்டளையிட்டுவிட்டுத் தாம் யுத்தம்பண்ணச் சித்தமானது	83
25.	கரனுடைய சேனைக்கும் இராமருக்கும் நடந்த பலமான யுத்தம்	87
26.	தூஷணன் வதை	91
27.	திரிசிரன் வதை	95
28.	இராமர் கரனுடைய தேரை அழித்து அவன் சாரதியைக் கொன்றது ...	98
29.	இராமர் கரனுடைய பாவங்களைக் கூறி அவன் கதையைத் துண்டித்தது ...	101
30.	கரன் வதை	104
31.	அகம்பனன் இலங்கையையடைந்து ஜனஸ்தானத்திலிருந்த கரன்முதலிய ராக்ஷசர்கள இராமரால் அழிந்ததை இராவணனுக்குத் தெரிவித்து அவனைச் சீதையை அபகரிக்கும்படி வேண்டுதல் ...	108
32.	சூர்ப்பணகை இலங்கைசென்று தனக்கு நேரிட்ட அவமானத்தையும் அரக்கர்களுக்கு வந்த ஆபத்தையும் இராவணனிடம் சொல்லிப் புலம்பல்	113
33.	இராவணன் தனக்கு வந்த கேட்டை அறியாமலிருந்ததற்காக அவனைச் சூர்ப்பணகை நிந்தித்தல்	116

ருக்கம். விஷயம். பக்கம்.

34. இராவணன் சூர்ப்பணகையிடம் இராமரைப்பற்றி விசாரித்தல் 118

35. இராவணன் மறுபடியும் மாரீசனிடம் சென்றது 121

36. இராவணன் மாரீசனிடம் தனக்குநேரிட்ட கஷ்டத்தையும் சீதையை அபகரிக்க வேண்டுமென்று தான் கொண்ட எண்ணத்தையும் எடுத்துச் சொல்லல் ... 125

37. இராமருடைய விரோதம் வேண்டாமென்று மாரீசன் இராவணனை வேண்டல் ... 128

38. மாரீசன் தான் இராமரிடம் பட்ட அவஸ்தையை இராவணனுக்குச் சொல்லல் ... 131

39. இராமரைத் தான் மற்றொருதரம் எதிர்த்து உயிர் பிழைத்ததையும் அன்றுமுதல் அவர் பயத்தால் யோகியானதையும் மாரீசன் இராவணனிடம் சொல்லல்... 134

40. இராவணன் வெகுகோபங்கொண்டு தான் சொன்னபடி செய்ய மாரீசனைக் கட்டளையிடல் 137

41. மாரீசன் மறுபடி தடுத்தல் 140

42. மானுருவங்கொண்டு மாரீசன் சீதைமுன் விளையாடுவது 142

43. இராமர் சீதையைப் பாதுகாக்க லக்ஷ்மணருக்குக் கட்டளையிட்டு மாயமானைத் தொடர்ந்து செல்லுதல் 145

44. மாரீசன் வதை 150

45. சீதை இராமரைத் தேட லக்ஷ்மணரை அனுப்புதல் 153

ருக்கம். விஷயம். பக்கம்.

46. இராவணன் சந்நியாசிவேடம்பூண்டு சீதை யிருந்தவிடம் சென்றது 157
47. இராவணன் கெட்ட எண்ணங்கொண்டதைச் சீதை தெரிந்துகொண்டுநிந்தித்தல் ... 161
48. சீதையிடம் இராவணன் தனது மகிமையை உரைத்தல் 166
49. இராவணன் சீதையை எடுத்துச் செல்லல் ... 168
50. ஜடாயு இராவணனைத் தடுத்தல் ... 173
51. ஜடாயுவுக்கும் இராவணனுக்கும் நடந்த யுத்தம் 175
52. ஜடாயு மாண்டபிறகு இராவணன் சீதையை எடுத்துக்கொண்டு செல்லல் 179
53. சீதை இராவணனை நிந்தித்தல் 183
54. இராவணன் சீதையை எடுத்துப்போய்த் தனது அந்தப்புரத்தில் வைத்தல் ... 186
55. இராவணன் சீதையைத் தனக்கு மனைவியாகும்படி வேண்டல் 189
56. சீதை இராவணனை நிந்தித்தல் 193
57. இராமர் மாரீசனைக் கொன்றுவிட்டுத் திரும்பி வருதல் 196
58. இராமர் சீதை எங்கே யென்று லக்ஷ்மணரை விசாரித்தல் 198
59. சீதையைத் தனியாக விடடுவந்த காரணத்தை லக்ஷ்மணர் இராமரிடம் கூறல் ... 200
60. இராமர் சீதையைத் தேடித் துக்கப்படுதல் ... 203
61. இராமர் சீதையை நினைந்து புலம்பல் ... 207
62. இராமர் சீதையை நினைந்துப் பின்னும் அதிகமாகப் புலம்பல் 210
63. இராமர் அடங்காத் துயருறல் 212

சருக்கம். விஷயம். பக்கம்.

64. இராமர் சீதையைத் தேடித் தென்திசை சென்று அரக்கர் அடிச்சுவடுகளைக் கண்டு இவ்வுலகத்தை அழித்துவிடுகிறேன் என்று கோபம் கொள்ளல் ... 214
65. லக்ஷ்மணர் இராமரைக் கோபத்தை யடக்கும்படி வேண்டல்... 221
66. லக்ஷ்மணர் பின்னும் இராமரைத் தேற்றுதல் 223
67. இராவணனால் வெட்டப்பட்டு விழுந்த ஜடாயுவை இராமர் காணல் ... 225
68. ஜடாயுவைத் தகனஞ் செய்தல் 228
69. இராமலக்ஷ்மணர்கள் கவந்தனைக் காணுதல் 231
70. கவந்தன் இராமலக்ஷ்மணர்களை அறிந்துகொண்டது 236
71. கவந்தன் தன் வரலாறு கூறுதல் ... 238
72. கவந்தன் இராமருக்கு சுக்கிரீவனோடு நட்புச் செய்துகொள்ளும்படி கூறல் ... 241
73. கவந்தன் ரிசியமூக பர்வதத்திற்கு வழி கூறுதல் 244
74. சவரி சுவர்க்கம் சென்றது 248
75. இராமர் பம்பையை அடைந்தது ... 252



உ

ஸ்ரீரஸ்து.

வால்மீகி ராமாயண வசனம்.

மூன்றவது

ஆரணியகாண்டம்.

முதற்சருக்கம்.

இராமர் தண்டகாரணியத்தில் பிரவேசித்து அவ்விடத்தில் வசித்துக்கொண்டிருந்த முனிவர்களிடமிருந்து மரியாதை பெற்றது.



எவ்விதத்திலும் தடுக்கவொண்ணாத தீரராகிய இராமர் மகாரணியமாகிய தண்டகாரணியத்தில் பிரவேசித்து, நாலுபக்கத்திலும் தருப்பைகளும் மரவுரிகளும் பரவியுள்ளதும், பிரமதேஜஸால் சூழப்பட்டதும், ஆகாயத்தில் ஜ்வலித்துக்கொண்டிருக்கிற சூரியமண்டலம் போல் பார்க்க முடியாததும், எல்லாப் பிராணிகளுக்கும் ஆசிரயமானதும், சுத்தப்படுத்திய அங்கணங்களையுடையதும், பலமான்கள் நிறைந்துள்ளதும், பட்சிஜாலங்களால் சூழப்பட்டதும், எப்போதும் அப்ஸரஸ்திரீகணங்களால் சம்மானிக்கப்பட்டு அவர்களுடைய நர்த்தனத்திற்கு இடமாயதும், விசாலமான அக்கினிச் சாலைகளாலும் ஸ்ருக் என்கிற ஹோமபாத்திரங்களாலும்

முனிவர் ஆச்சிரமம்.

மான்றேல்களாலும் தருப்பைகளாலும் சமித்துகளாலும் கலசங்களாலும் பலமூலங்களாலும் விளங்குவதும், இனிய கனிகளையுடைய காட்டிலுண்டாகின்ற பெரிய புண்ணிய விருக்ஷங்களடர்ந்ததும், பலிஹோமங்களினல் பூஜிக்கப்பட்டதும், தூய்மையானதும், வேதகோஷத்தினல் ஒலிகொண்டதும், வனங்களில் உண்டாகுவனவான மலர்கள் பரவினதும், தாமரை மலர்கள் பொருந்திய ஓடைகளையுடையதும், பலமூலங்களை அருந்துபவர்களும் இந்திரிய நிக்கிரகம் செய்தவர்களும் மரவுரி மான்றேலைத் தரித்தவர்களும் சூரியாக்கினிகளுக்குச சமானமான சாந்தியையுடையவர்களுமான புராதன முனிவர்கள் வசிப்பதும், பரிசுத்தமானவர்களும் நியமமான ஆகாரத்தை யுடையவாகளுமான பரமரிஷிகளால் விளங்குவதுமான முனிவர்களுடைய ஆச்சிரம மண்டலத்தைக் கண்டார். ஸ்ரீமானும் மஹாதேஜஸ் உள்ளவருமான இராகவர், பிரமாவினுடைய கிரகத்துக்குச் சமானமானதாயும், வேதசப்தத்தால் ஒலிகொண்டதாயும், மஹாமகிமை யுடையவர்களும் பிரமவித்துக்களுமான அந்தணர்களால் விளங்குவதாயுமுள்ள அவ்வாச்சிரம மண்டலத்தைக் கண்ணுற்று, தனது உயர்ந்த வில்லின் நாணைக் கட்டவிழ்த்து அவ்வழிச்சென்ருர். அங்கிருந்த திவ்யக்ஞானிகளாகிய மகரிஷிகள் இராமரையும் எசஸ்வினியாகிய வைதேகியையும் லக்ஷ்மணரையும் கண்டு அன்போடு எதிர்கொண்டு சென்றார்கள். தர்மசீலர்களான த்ருட நியமத்தை யுடைய அவர்கள், உதயசந்திரன்போன்ற இராமரையும் லக்ஷ்மணரையும் எசஸ்வினியாகிய ஜானகியையும் பார்த்து ஆசிகூறி அழைத்துக்கொண்டார்கள். அந்த வனவாசிகள், இராமருடைய அவயவங்களின் அமைப்பையும், சோபையையும், சவுந்தரியத்தையும், நற்கோலத்தையும் கண்டு ஆச்சரியமடைந்தார்கள். அவ்வனவாசிகளெல்லாம் ஆச்

முனிவர்கள் இராமரை எதிர்கொள்ளல்.

சரியகரமான வைதேகியையும் லக்ஷ்மணரையும் இராமரை யும் கண்கொட்டாது பார்த்தார்கள். மஹாபாக்கியவான் களாகிய ரிஷிகள், எல்லாப் பிராணிகளுக்கும் நன்மை புரிபவரும், அதிதியுமாகிய இராகவரை அங்குள்ள பர் ணசாலைக்குள் உட்காரவைத்தார்கள். பிறகு, அக்கினிக் கொப்பானவர்களும், மகா பாக்கியவான்களும், தர்மசீலர் களுமாகிய அம்முநிவர்கள், இராமரை விதிப்படி உப சரித்து, தீர்த்தத்தையும் வனத்திலுள்ள பலமூல புஷ்பங் களையும் கொண்டுவந்தார்கள். பின்பு அவருக்கு ஓர் ஆச்சிர மம் அளித்ததன்பின், தர்மத்தை நன்குணர்ந்த அம்முநி வர்கள், கைகூப்பிக்கொண்டு பின்வருமாறு கூறினார் கள்:—"வருணாச்சிரமங்களைப் பாதுகாத்து எல்லாரையும ரக்ஷிப்பவராய், வெகு புகழ் பெற்றவராய், வெகு மரியாதைபொருந் தியவராய், எல்லாராலும் வணங்கப்பெற்றவராய், துஷ் டர்களை அடக்கிச் சிஷ்டர்களைப பரிபாலனம் பண்ணுபவ ராய்த் தாங்கள் உள்ளீர்கள். தாங்களே எங்களெல்லா ருக்கும் யஜமானர். இந்திரனுடைய நான்கிலொரு அம்ச மாகிய இராஜா குடிகளை ரக்ஷிப்பது வழக்கமாகையால், அவர் எல்லாராலும் வணங்கப்பட்டுச் சகல சௌக்கியத் தையும் அனுபவிக்கிறார் என்பது கோட்பாடு. நாங்களெல் லாரும் தங்களுடைய நாட்டில் வசிக்குங் குடிகளாயிருக்கி றோமாகையால், தாங்களே எங்களெல்லாரையும் ரக்ஷித் தருளவேண்டும். காட்டிலிருப்பினுஞ்சரி நகரத்தில் வசிப் பினுஞ்சரி தாங்களே எங்களுக்கு இறைவர். நாங்கள் ஐம்புலன்களையும் வென்று பிறரைச் சாபத்தால் வருத்தா தவர்கள். ஆகையால் கருப்பத்திலிருக்குங் குழந்தையைத் தாய் வெகு ஜாக்கிரதையாகப் பாதுகாப்பதுபோலத் தபசி களாகிய எங்களைத் தாங்கள் பாதுகாக்கவேண்டும்."

முநிவர்கள வேண்டுகோள.

இவ்வாறு சொல்லி, அம்முநிவர்கள் காட்டிலுள்ள பழங்களாலுங் கிழங்குகளாலும் புஷ்பங்களாலும் இன்

னும் அநேகவித ஆகாரங்களாலும் இராமரையும் லக்ஷ்மணரையும் பூசித்தார்கள். இவ்வண்ணமே நியாயந்தவறாது நடப்பவர்களும் அக்கினிக்கொப்பானவர்களுமான மற்றச் சித்தர்களுந் தபசிகளும் இராமரைத் தங்களுக்கெல்லாம் யஜமானராக நினைத்து ஆராதித்தார்கள்.

இரண்டாஞ் சருக்கம்.

இராமர் தண்டகாரணியத்தில் விராதன் என்ற அசுரனைக்காணல்.

இவ்வாறு ஆராதிக்கப்பட்ட இராமர், சூரியோதய காலத்தில், முநிவர்களெல்லாரிடத்திலும் விடைபெற்று, அந்த அரணியத்துள்ளே பிரவேசித்தார். லக்ஷ்மணரோடு சென்ற இராமர் அக்காட்டின் மத்தியில், அநேக மிருக கணங்கள் நிறைந்திருப்பதையும், புலிகளும் கரடிகளும் ஓடித்திரிவதையும், நாசமடைந்த விருக்ஷங்களையும், கொடிகளையும், பார்ப்பதற்கு முடியாத ஓடைகளையும், பட்சிகள் வாயடங்கி இருப்பதையும், சுவர்க் கோழிகள் கத்திக் கொண்டிருப்பதையும் கண்டார். கொடிய மிருகங்கள் சூழ்ந்த அவ்வரணியத்தில், சீதையுடன் சென்ற இராமர், மலையின் கொடுமுடி போன்றவனும், நரமாமிசத்தை உண்பவனும், பெருஞ்சப்தத்தை உடையவனும், ஆழ்ந்த கண்களும் பரந்த முகமுமுள்ளவனும், விசாலமானவனும், மேடுபள்ளமான வயிற்றையுடையவனும், நீண்டவனும், உற்றுப்பார்ப்பதற்கு அருவருப்பும் பயமுமுண்டாகும் படியான தோற்றத்தை உடையவனுமாகிய ஓர் அரக்கனைக் கண்டார். அவன் மாமிசங்களொட்டிக்கொண்டும் ரத்தஞ் சொட்டிக்கொண்டு மிருந்த புலித்தோலொன்றை யுடுத்து, எல்லாப்பிராணிகளையும் பயமுறுத்தும்பொருட்டுத் தனது வாயைப் பிளந்துகொண்டு வந்த யமன்போல்

விராதனைக் காணல்.

காணப்பட்டான். அவன் பொருத்தமில்லாத அங்கங்க ளுடையவனும், அதிக விகாரமானவனுமா யிருந்தான். அன்றியும் அவன் மூன்று சிங்கம், நான்கு புலி, இரண்டு செந்நாய், பத்து மான், தந்தங்களையுடைய நிணஞ் சிந்து கின்ற பெரிய யானைத்தலை ஒன்று, இவைகளெல்லா வற்றையுந் தனது இருப்புச்சூல மொன்றில் குத்தி எடுத் துக்கொண்டு, பெருஞ்சத்தமாகக் கர்ச்சித்தான். இராமர் லக்ஷ்மணர் சீதை மூவர்களையுங் கண்டு, வெகு கோபத் துடன், பிரளயகாலத்து யமன் வருவதுபோல் அவன் அவர்களை நோக்கி ஓடிவந்தான். உலகத்தையே அசைத்து விடுவதுபோலப் பயங்கரமாக ஒரு பெருங் கர்ச்சனைசெய்து சீதையை எடுத்து இடுப்

சீதாபகரணம்.

பில் வைத்துக்கொண்டு கொடுஞ்சத்தரமோடி, “நீங்களிரு வர்களும் சடையையும் மரவுரியையும் அணிந்துகொண்டு, ஒரு ஸ்திரீயைக் கூடவழைத்துக்கொண்டு, உங்களுடைய உயிர்க்கு அழிவைச் செய்துகொண்டு, ஆபரணத்தையும் வில்லையும் கத்தியையும் தரித்துக்கொண்டு, தண்டகாரணி யத்தில் புகுந்தீர்கள்! நீங்கள் தபசிகளென்றால் ஒரு பெண்ணை நீங்கள் உடன்கொண்டு சஞ்சரிப்பானேன்? வெகு பாவிகளாக அதர்மம் செய்துகொண்டும், முனிவர் களுக்கு இழிவை உண்டாக்கிக்கொண்டும் வந்திருக்கும் நீங்கள் யார்? நான் விராதன் என்ற ராக்ஷஸன். ஒருவரா லும் அணுகக்கூடாத எனது கோட்டையாகிய இக்காட்டில் ஆயுதபாணியாகச் சஞ்சரித்து முனிவர் மாமிசங்களைப் புசித்துச் சீவிக்கிறேன். அழகா யிருக்கும் இம்மடந்தை இன்றுமுதல் என் மனைவியாவாள். நான் யுத்தத்தில் உங்க ளிருவர்களையுங் கொன்று பாவிகளாகிய உங்களுடைய இரத்தத்தைக் குடிப்பேன்” என்றான். இவ்விதம் அந்தத் துஷ்டனான விராதன் வெகு செருக்குடன் சொன்ன பயங் கரமான வார்த்தையைக் கேட்டுச் சீதை மெய்தடுமாறி மனக்குழப்பமடைந்து பெருங்காற்றாலடிக்கப்பட்ட வாழை

போலப் பயத்தால் நடுநடுங்கினாள். இப்படிச் சீதையை விராதன் தூக்கிக்கொள்ளவே இராமர், முகத்தின் களை குன்றி, லக்ஷ்மணரைப் பார்த்துப் பின்வருமாறு சொன்னார். "பாராய் லக்ஷ்மணா! ஜனகராஜருடைய மகளும் எனது மனைவியுமாகிய வெகு நன்னடக்கையுள்ள சீதை இப்பொழுது விராதன் மடியிலிருக்கிறாள்! வெகு சுகமாய் வளர்ந்த புகழ்பெற்ற ராஜகுமாரிக்கு வந்த கதியைப்பார்! நம்மை உத்தேசித்துக் கைகேயி கேட்டவரத்தின் பிரயோஜனம் இன்று அவளுக்குக் கைகூடிவிட்டது. தனது குமாரனுக்கு இராச்சியங் கிடைத்தால் போதும் என்றமட்டில் சந்தோஷப்படாமல், பின்வரப்போவதை முன்னதாகவே ஆலோசித்து, யாவருக்கும் ஒரு கெடுதலும் பண்ணாத என்னை எந்த எண்ணத்தைக்கொண்டு காட்டுக்கனுப்பினாளோ அவ்வெண்ணத்தின் முடிவை எனது சிறியதாய் இன்று அடைந்துவிட்டாள். அயலான் இன்று வைதேகியைத் தொட்டது என் தந்தையை நான் இழந்ததும் இராச்சியத்தை இழந்ததுமாகிய இரண்டு துக்கங்களுக்கும் மேலான துக்கத்தை என் மனத்தில் உண்டுபண்ணுகிறது."

இராமர் துக்கித்தல்.

இவ்விதமாகச் சோகத்தினால் கண்ணீர்விட்டு இராமர் துயருழன்று சொல்லிக்கொண்டிருந்தபொழுது, லக்ஷ்மணர் மந்திரத்தால் கட்டுண்ட ஸர்ப்பம்போல் சீறிக்கொண்டு, அவரைப்பார்த்து "ஐயா காகுத்தரே, இந்திரன் போல எல்லாப்பிராணிகளுக்கும் நாதராயிருக்கும் தாங்கள் இட்ட கட்டளையைநிறைவேற்ற நான் காத்துக்கொண்டிருக்க, தாங்கள் அநாதைபோல் ஏனிவ்வாறு பரிதபிக்கிறீர்கள்? இன்று கோபமடைந்திருக்கும் எனது பாணம் ஒன்றினாலேயே இந்த விராதனென்ற அரக்கன் உயிர்போய்க் கீழே விழப்போகிறான்; அவனிரத்தத்தை இப்பூமி குடிக்கப்போகிறது. இந்திரன் தனது வச்சிராயுதத்தை ஒரு பர்வதத்தில்

லக்ஷ்மணர் தேறுதல்.

பிரயோகிப்பதுபோல், இராச்சிய விஷயமாகப் பரதனி டம் நான் கொண்டிருக்குங் கோபத்தை இவ்விராதன் மேல் செலுத்துகிறேன். என்கையின் ஆற்றலால் அதிக வேகங்கொண்டு செல்லும் பாணம் இவன் மார்பைப் பிளந்து, உடலினின்றும் உயிரைப் போக்கி, இவன் சுழன்று பூமியில் விழும்படி செய்யப்போகிறது" என்று மிக்ககோபத்துடன் கூறினர்.

மூன்றுஞ் சருக்கம்.

விராதன் யுத்தம்.

மறுபடியும் விராதன் "நான் கேட்பதற்குச் சரியான விடைகொடுங்கள். நீங்கள் யார்? எங்கேபோகிறீர்கள்?" என்று அக்காடுமுழுதுக் தனது சத்தத்தால் நிரப்பியது போலக்கேட்டான். இவ்வாறு கோபத்தால் தீப்போல்ஜ்வ லித்துக்கொண்டிருக்கும் அவ்வரக்கனைப்பார்த்து அவன் கேட்டகேள்விகளுக்கு "நாங்கள் இக்ஷ்வாகு வம்சத்தில் பிறந்தவர்கள். நற்சரிதையையுடைய க்ஷத்திரியர்கள். இப் பொழுது வனத்தில் சஞ்சரித்துக்கொண்டிருக்கிறோம்" என விடைகூறி, "நீயார்? ஏனிந்தத் தண்டகாரணியத்தில் வசிக்கிறாய் என்பதை அறிய ஆவலுடனிருக்கிறோம்?" என இராமர் வினவினர். இப்படிச் சத்தியசந்தரான இராமர் சொன்னதும் அவ்வரக்கன் "ராஜனே, நானென் விருத்தாந்தத்தைச் சொல்லுகி றேன். ஓ ராமா, கேள். நான் ஜயன் என்ப வனுடைய குமாரன்; சதஹ்ரதை என்பவள் என் தாய்; ராக்ஷஸர்கள் எல்லாரும் என்னை விராதனென் றழைப் பார்கள். நான் வெகுநாள் தவம்புரிந்து பிரமதேவரைச் சந்தோஷப்படுத்தி அவரிடமிருந்து, ஆயுதத்தால் ஒரு வரும் என்னைக்கொல்லமுடியாதென்றும், என்னை வெட்ட

விராதன் விருத்தாந்தம்.

வும் பிளக்கவும் முடியாதென்றும் வரம்பெற்றிருக்கிறேன். நீங்கள் இப்பெண்ணை இங்கு விட்டுவிட்டு, இவள் மறுபடி உங்களிடம் திரும்பிவரப்போகிருளென்ற எண்ணத்தை யும் ஒழித்துவிட்டு, உங்களுயிரில் ஆசையிருந்தால் இந்த க்ஷணமே ஓடிவிடுங்கள்" என்றான்.

இவ்வாறு கொடிய எண்ணங்கொண்டு பயங்கரமான வடிவத்துடன் விளங்கும் விராதனைப்பார்த்து, அவன்சொன்னதைக்கேட்டு, இராமர் கோபத்தால் கண்கள் சிவந்து "அற்பனே! நீ கெட்டாய்! உன் எண்ணமொன்றும் நிறைவேறாது. நீ சீக்கிரமாக மரணத்தையே தேடுகிறாய். உன்னை யுத்தத்தில் வீழ்த்துகிறேன் நில். நீ என்னிடமிருந்து உயிருடன் தப்பித்துக்கொள்ள முடியாது" என்று கூறினர். இப்படிச்சொல்லி உடனே இராமர் தமது வில்லை நாணேற்றி அதில் வெகுகூர்மையான பாணங்களைச் சீக்கிரமாகத் தொடுத்துவிட்டார். நாணேற்றிய தமது வில்லினின்றும் தங்கம் இழைத்து இறக்கைகள்கட்டிக் கருடன்போலவும் காற்றுவேகமாகவும் போகத்தக்க ஏழு பாணங்களை அவ்வரக்கன்மேல் அத்தீரர் பிரயோகித்தார். மயிலிறகு கட்டப்பட்ட அவ்வம்புகள் விராதனுடைய சரீரத்தைப் பிளந்துகொண்டு இரத்தத்தில் தோய்ந்து அக்கினிப் பிழம்பு போன்று பூமியில் விழுந்தன. இவ்வாறு அடிபட்டவுடன் அவன் வைதேகியைப் பூமியில் விட்டுவிட்டுத் தனது சூலத்தை மேலே யுயர்த்தி வெகு கோபமடைந்தவனுகி இராமரும் லக்ஷ்மணருமிருந்த இடத்தைநோக்கி ஓடிவந்தான். பெரிய அட்டகாசம்பண்ணி, இந்திரதுவசம்போல விளங்கும் தனது சூலத்தை எடுத்துக்கொண்டுவரும் விராதன் தனது வாயைப் பிளந்துகொண்டுவரும் ஒரு யமன் போலக் காணப்பட்டான். பிரளயகாலத்து யமன்போல் விளங்கும் விராதன்மேல் இராமலக்ஷ்மணர்கள் இருவரும் வெகு கூர்மையான அம்புகளை மழைபொழிவதுபோலப்

விராதன் யுத்தம்.

பொழிதார்கள். அவன் அவ்வளவு பாணங்களையுந் தாங்கி நின்று சிரித்துச் சரீரத்தை உதறினன். அவ்வாறு அவன் சரீரத்தை உதறவே அப்பாணங்கள் பொலபொலவென்று உதிர்ந்து கீழே விழுந்தன. தான் பெற்றிருந்த வரத்தின் மகிமையால் அவ்வரக்கன் தனது பிராணவாயுக்களை யெல்லாம் இழுத்துப்பிடித்து வெகு பலமடைந்து தனது சூலத்தை எடுத்துக்கொண்டு இராமரை எதிர்த்து வந்தான். ஆகாசத்தில் உயர்ந்து நெருப்புப்போல எரிந்துகொண்டு வச்சிராயுதம்போல விளங்கிய அச்சூலத்தை, வில்லாளிகளுட் சிறந்தவரான இராமர், இரண்டு பாணங்களைச் செலுத்தித் துண்டித்தெறிந்தார். இராமருடைய பாணங்களால் துண்டிக்கப்பட்டுப் பூமியில் விழுந்த சூலாயுதம் இடியால் பிளந்தெறியப்பட்ட மேருவின் சிகரம்போல் விளங்கிற்று. உடனே அவர்களிருவரும், கருநாகம்போல் கொடிய சக்தியுள்ளவைகளான தங்களுடைய கத்திகளை எடுத்துக்கொண்டு, அவனிடம் வேகமாகவோடி, அவனை விசையாக வெட்டினார்கள். அவ்வாறு வெட்டிக்கொண்டிருக்கையில், அசைக்கவொண்ணாத புருஷவியாக்கிரங்களாகிய இராம லக்ஷ்மணர்களை விராதன் தனது இருகைகளாலும் வேகமாக அணைத்துத் தூக்கிக்கொண்டு ஓடத் தலைப்பட்டான். அவன் கொண்ட கருத்தை இராமரறிந்து லக்ஷ்மணரைப் பார்த்து, அவன் "இச்சையின்படியே எந்தவழி நம்மைத் தூக்கிக்கொண்டு போகிறானோ அந்தவழியே போகட்டும். அவனிப்பொழுது செல்லுகிற வழி நாம் போகவேண்டியவழிதான்" என்றார். அரக்கன் அப்போது இராமலக்ஷ்மணர்கள் இருவரையும் ஏதோ சிறுகுழந்தைகளைத் தூக்குவதுபோல் தூக்கித் தனது தோளின் மேல் வைத்துக்கொண்டு அலக்ஷியமாக ஓட ஆரம்பித்தான். அவன் ரகுகுல சிம்மங்களான அவ்விருவர்களை

விராதன் இராமலக்ஷ்மணர்களைத் தூக்கிச் செல்லல்.

யும் தனது தோளின்மேல் தூக்கிக்கொண்டு பயங்கரமாக அட்டகாசம்பண்ணிக் காட்டை நோக்கிச் சென்றான். அவன் கடைசியாய் மேகக்கூட்டம்போல் இருளடைந்துள்ளதும், அநேகவித விருக்ஷங்கள் அடர்ந்ததும், நானாவித பறவைகள் நிறைந்ததும், நரி ஊளையிடுவதும், துஷ்ட மிருகங்கள் பொருந்தியதுமான வனத்தில் புகுந்தான்

நான்காஞ் சருக்கம்.

விராதன் வதை.

இராமலக்ஷ்மணர்கள் இருவரையும் எடுத்துக்கொண்டு விராதனோடினதைச் சீதைபார்த்துத் துக்கத்தால் தனது அழகிய கைகளைத் தூக்கிக்கொண்டு இரைந்து கதறினாள். "சத்தியவானாயும் சீலமுடையவராயும் சுத்தராயுமிருக்கிற தசரதகுமாரரான இராமரை லக்ஷ்மணருடன் எடுத்தோடுகிறானே ஒரு பயங்கரமான அரக்கன்! இனி என்னைச் செந்நாய்களோ அல்லது புலியோ அல்லது சிறுத்தையோ புசித்துவிடப்போகின்றன. அப்பா அரக்கர்களுக்குள் உத்தமனே, உனக்கு நமஸ்காரம். நீ அவர்களிருவர்களையும் விட்டுவிட்டு என்னை எடுத்துக்கொண்டுபோ" என்றாள். இவ்வாறு கூறிய சீதையுடைய வசனத்தைக்கேட்டு இராமரும் லக்ஷ்மணரும் அந்தத் துஷ்ட அரக்கனைக் கொலைசெய்யவிரைந்து, அவனுடைய இடது புஜத்தை லக்ஷ்மணரும் வலதுபுஜத்தை இராமரும் வெட்டினார்கள். கைகள் வெட்டுப்படவே, மேகத்துக்கொப்பானஅரக்கன் நடுக்கமடைந்து வஜ்ராயுதத்தினால் பிளக்கப்பட்ட மலைபோல் பூமியில் விழுந்தான். அவ்வாறு விழுந்தவனை இராமலக்ஷ்மணர்கள் தங்கள் கைக்குத்தாலும் முழங்காலிடியாலும்

சீதை துக்கித்தல்.

காலுதையாலும் பூமியில் தேய்த்தார்கள். அனேக பாண ங்களால் அடிக்கப்பட்டும் கத்திகளால் வெட்டப்பட்டும் மற்றும் பலவிதமாய் இடிக்கப்பட்டும் இராக்கதன் சீவனை விடவில்லை. இவ்விதமாக உயிர்போகாமலிருந்த மலைக்குச் சமானமான அரக்கன் கொல்லமுடியாதவனென்று அறி ந்து, பயமடைந்தவர்களுக்கு அபயம் கொடுக்கின்ற சீமா னாகிய இராமர் லக்ஷ்மணரைநோக்கி "ஓ புருஷசிங்கமே, இவ்வரக்கன் தவத்தின்பலத்தால யுத்தத்தில் ஆயுதங்க ளால் கொல்லப்படான். ஆகையால் நாமிவனைப் பூமியில் அடக்கம் செய்வோம்" என்றார். இப்படி அவர் சொன்ன சொல்லை விராதன் கேட்டு வெகுதீனசுவரத்துடன் "நான் எனது அஞ்ஞானத்தால் முதலிலேயே தாங்களின்னாரென் பதை அறிந்துகொள்ளவில்லை. இப்பொழுதுதான் தாங் கள் கௌசலையின் அருமைத்திருமகன் என்று தெரிந்து கொண்டேன். மிக்க பாக்கியவதியான சீதையையும் வெகு கீர்த்தி பொருந்திய லக்ஷ்மணரையும் நானிப்பொழுது தான் அறிந்துகொண்டேன். நான் சாபத்தால் இந்தக் கோரமான ராக்ஷஸ ரூபமெடுத்தேன்; தும்புரு என் னும் பெயருள்ள கந்தர்வன்; குபேரனால் சபிக்கப்பட்டு இக்கதியை யடைந்தேன். என்னை அவர் சபித்தபின் நான் அவரைச் சந்தோஷப்படுத்தி எப்பொழுது இச்சாபம் நீங்குமென்று கேட்க, பெருந்தகையாகிய அவர் "தசரதகுமாரராகிய இராமர் உன்னை யுத்தத்தில்வீழ்த்தும்பொழுது நீ மறுபடி யும் உன்னுடைய சொந்த உருவமடைந்து சுவர்க்கலோகஞ் சேர்" என்று அனுக்கிரகித்தார். இவ்வாறு நானொரு காலத்தில் அரம்பையிடம் வைத்த ஆசையால் குபேரனை வணங்காமல் இருந்ததற்காக, அவர் என்மேல் கோபங் கொண்டு சபித்தார். ஓ! சத்துருக்களைத் தவிக்கும்படி செய்கிற இராகவா, தங்களுடைய அனுக்கிரஹத்தால் இந்தக் கொடிய சாபத்தினின்றும் நான் விடுபட்டேன்

விராதன் பூர்வ விருத்தாந்தம்.

இனி நான் என்லோகத்திற்குப் போகிறேன். உங்களுக்கு க்ஷேமம் உண்டாகட்டும். இங்கிருந்து ஒன்றரையோசனை தூரத்தில், சூரியன்போல் தமது காந்தியால் விளங்கும் தர்மாத்துமா சரபங்கமகரிஷி வசிக்கிறார். அவரிடம் சீக்கிரஞ் செல்லுங்கள். அவர் உங்களுக்கு க்ஷேமத்தைச் செய்வார். என்னைக் குழியில் அடக்கஞ்செய்துவிட்டு க்ஷேமமாய்ப் போங்கள். இறந்துவிட்ட அரக்கர்களை அடக்கம்செய்வதே பழைமையான தர்மம். எந்த ராக்ஷஸர்கள் அடக்கம் செய்யப்படுகிறார்களோ அவர்களுக்குத் திஸ்தாலோகம்கிடைக்கும்" என்றிவ்வாறு சொல்லிக்கொண்டே தன்மேல் பாய்ந்திருந்த பாணங்களின் வேதனை பொறுக்கமுடியாமல் தனது சரீரத்தைவிட்டுச் சுவர்க்கஞ்சேர்ந்தான். அவ்வரக்கன் சொன்னதைக்கேட்டு இராமவர் லக்ஷ்மணரைநோக்கிக் "கொடிய காரியங்களைப் பண்ணிக்கொண்டிருந்த யானைபோன்ற இக்கொடிய அரக்கனைப் புதைக்கப் பெருங்குழிஒன்று வெட்டுக" என்றுகூறி அவன்கழுத்தைத் தமது காலால் மிதித்துக்கொண்டு நின்றார். லக்ஷ்மணர் ஒரு மண்வெட்டியை எடுத்துக்கொண்டு அவ்விராதனுடைய தேகங் கிடந்த இடத்துக்குச் சமீபத்தில் பெருங்குழி யொன்று வெட்டினார். குழி வெட்டி முடிந்தவுடன் இராமர் தமது காலை அவ்வரக்கன் கழுத்தைவிட்டெடுக்க, கூர்மையான முளைபோலுள்ள செவியனும் பெருஞ் சப்தத்தை யுடையவனுமான விராதனை லக்ஷ்மணர் குழியில் தள்ளினார். அப்பொழுது பெருஞ்சப்த முண்டாயிற்று. வெகு பராக்கிரமசாலிகளும உறுதியுடையவர்களுமான இராமலக்ஷ்மணர்கள் அவ்வரக்கனை யுத்தத்தில் வென்று, வெகு சந்தோஷமடைந்து, பயங்கரமாகக் கத்திக்கொண்டிருந்த அவனைத் தூக்கிக் குழியில் போட்டார்கள். அந்த மகா வசுரன் போரில் கூர்மையான ஆயுதங்களால் விழான் என்ற சங்கதியை சமயோசிதம் தெரிந்த வீரர்கள் அறிந்து

விராதனைப் புதைத்தல.

கொண்டு, அவனைக்கொல்லத்தக்க உபாயத்தைத் தீர்மா னம்செய்து, அவனைக் குழியில் தூக்கிப்போட்டு மாள்வித் தார்கள். விராதன் தான் சஸ்திரத்தால் மாளாத வரம் பெற்றிருத்தலைத் தானாகவே தெரிவித்து இராமர் கையா லேயே தான் மாளவேண்டுமென்று வேண்டிக்கொண்ட படியால், அவர் அவன் வேண்டுகோளின்படி குழியொ ன்று வெட்டி அதில் அவனைப் புதைக்கும்படியாயிற்று. அப்பொழுது அவ்வரக்கனிட்ட கூச்சல் அவ்வன முழுதும் நிரம்பிற்று. இவ்வண்ணம் விராதனைக் குழியில் கற்க ளையும் மண்ணையும் போட்டுப் புதைத்துவிட்டு, தங்களுக்கு வந்த பயம் நீங்கி, இராமலக்ஷ்மணர்கள் வெகு சந்தோஷ மடைந்தார்கள். சீதையுடன் சந்தோஷத்தோடு அவ்விரு வரும் தங்களுடைய தங்கக்கட்டமைந்த விற்களை எடுத் துக்கொண்டு அக்காட்டில் சூரிய சந்திரர்கள் போல் சஞ் சரித்தார்கள்.

ஐந்தாஞ் சருக்கம்.

சரபங்கமகரிஷியை இந்திரன் பிரமலோகத்துக்கழைக்கவந்தது.

பயங்கரமான பலம்பொருந்திய விராதனை அவ்வாறு காட்டில் கொன்றபிறகு, இராமர் சீதையிடம் வந்து அவளை ஆலிங்கனம் பண்ணிக்கொண்டு சமாதானப் படுத்தித் தமது தம்பியாகிய வெகு பலபராக்கிரமம் தங்கிய லக்ஷ்மணரைப் பார்த்து “இந்தக் காடு வெகு கஷ்டமானது ; எளிதில் கடக்கமுடியாதது. நமக்கும் இக் காட்டுவழி நன்றாகத் தெரியாது. ஆகையால் நாம் சீக்கிர மாகச் சரபங்கருடைய ஆச்சிரமத்துக்குப் போவோம்” எனச் சொல்லிக்கொண்டு சரபங்கமகரிஷியின் ஆச்சிரமத்தை நோக்கி நடந்தார். தேவருக்கொப்பான மகிமையுள்ள வரும், தவத்தால் பரிசுத்தம் பண்ணப்பட்ட ஆத்து

மாவை உடையவருமான சரபங்க மகரிஷியின் ஆச்சிர மத்துக்குச் சமீபத்தில் வந்துகொண்டிருக்கையில் இராமர் ஒருபெரிய ஆச்சரியத்தைக் கண்டார்: அங்கே இந்திரன் சூரியனுக்கும் அக்கினிக்கும் ஒப்பான காந்தியால் விளங்கும் தேகத்தையுடையவனாகி, அழகாகப் பிரகாசிக்கும் ஆடையாபரண மணிந்து கொண்டு, தேவபரிவாரங்கள் சூழ, தனது இரதத்தை விட்டிறங்கிப் பூமியில் மிதியாமல் அதற்கு மேலாகவே நின்றுகொண்டிருந்தான். அவனைச் சூழ்ந்து அவனைப்போன்ற அநேக மகாத்துமாக்கள் நின்று வணங்கிக்கொண்டிருந்தார்கள். அதற்குச்சமீபத்தில் இளஞ் சூரியனுக்கொப்பான அவனுடைய இரதமும் பச்சைக் குதிரைகள் கட்டப்பட்டு ஆகாசத்திலேயே நின்றுகொண்டிருந்தது. அவனுடைய வெண்குடை அநேக விதமான மாலைகளால் அலங்கரிக்கப்பட்டு வெண் மேகம்போலவும் சந்திர மண்டலம் போலவும் விளங்கிக்கொண் டிருந்தது. அவனுடைய இருபக்கங்களிலேயும் இரண்டு உத்தமஸ்திரீகள் பொற்காம்புபோட்ட இரண்டு விலையுயர்ந்த வெண்சாமரங்களைத் தங்கள் கையாலெடுத்து வீசிச் சுழற்றிக்கொண்டிருந்தார்கள். கந்தர்வர்களும் தேவர்களும் சித்தர்களும் அநேக உத்தம ரிஷிகளும், இந்திரன் ஆகாசத்தில் நிற்கையிலேயே பல அழகான மொழிகளால் அவனை ஸ்தோத்திரம் பண்ணிக்கொண்டிருந்தார்கள். அவ்வாறு அங்குவந்திருந்த இந்திரன் சரபங்கமகரிஷியிடம் ஏதோ பேசிக்கொண்டிருப்பதை இராமர் தூரத்திலேயே கண்டு, லக்ஷ்மணரைப்பார்த்து, அந்த இரதத்தை அவருக்குக் காட்டி "வெகு காந்தியும் அழகும் உடையதாகிப் பார்ப்பதற்கு வெகு ஆச்சரியமாகத் தனது பூரணகிரணங்களுடன் பிரகாசிக்கும் சூரியன்போல் ஆகாசத்தில் நிற்கும் அந்த இரதத்தைப்பார். லக்ஷ்மணா, நாம் இந்திரனுடைய குதிரைகள் எப்படிப்பட்டதென்று முன் கேள்வியுற்றிருக்கி

இந்திரனைக் காணல.

றேமோ அப்படிப்பட்ட குதிரைகளையே நாம் இப்பொ ழுது ஆகாசத்தில் நேரில் பார்க்கிறேம் என்பது நிச்சயம். அந்த இரதத்தைச் சூழ்ந்துகொண்டு நூறு நூருக நிற்கி றூர்களே அவர்களை நன்ருகப்பார். அவர்கள் புருஷ சிரேஷ்டர்கள்; குண்டலங்களைத் தரித்துக்கொண்டு, யௌ வனமுடையவர்களாய், கைகளில் கத்தியேந்தி, விசாலமா யும் விபுலமாயுமுள்ள மார்புடையவர்களாய், தாழ்ப்பாள் போல் நீண்ட கைகள் அமைந்து, சிவப்பு வஸ்திரங்கள் உடுத்து, புலிகள்போல் கிட்ட நெருங்கவொண்ணுத பராக்கிரமம் பொருந்தியவர்களாய், தங்கள் மார்புகளில் அக்கினி போல் பிரகாசிக்கும் ஆரங்களை அணிந்து கொண்டு, எல்லாரும இருபத்தைந்து வயதுள்ள உரு வத்தை உடையவர்களாய் இருக்கிறூர்கள். இவ்வுருவம் அவர்களுக்கு எப்பொழுதும் ஏற்பட்டது. இப்பொழுது எப்படிப் புருஷசூரர்களாயும், பிரியமான உருவமுள்ளவர் களாயும் காணப்படுகிறூர்களோ அப்படியே அவர்கள் எப்பொழுதும் இருப்பார்கள். இரதத்தில் காந்தியுடன் விளங்குகின்றவர் இன்னூரென்று நானறிந்துகொண்டு வரு கிறவரையில், அப்பா லக்ஷ்மணு, நீ இங்கேயே கொஞ்ச நேரம் சீதையுடன் நின்றுகொண்டிரு" என்றூர். இவ் வாறு சொல்லிக் காகுத்தர் சரபங்கமகரிஷியின் ஆச்சிர மத்துக்கு எதிரே சென்றுகொண்டிருந்தார். இராமர் வருவதை இந்திரன் பார்த்துச் சரபங்கமகரிஷி யிடம் "இராமரிங்கு வந்துகொண்டிருக்கிறூர். அவரிப்பொழுது என்னைக்காணுவது தகுதியன்று. முன்னர்த் தமது காரி யத்தை முடிக்கட்டும்; பிறகு என்னை அவர் பார்க்கலாம். அவர் சீக்கிரத்தில் ஜெயித்ததுக் காரியத்தை முடித்துக்கொ ண்டவுடன் நானே அவரைப் பார்ப்பேன். வேறெருவரா லும் செய்யமுடியாத பெருங்காரியம் அவரால் ஆகவேண்டி யிருக்கிறது. அதை முடித்துவிட்ட பிறகுதான் அவர் என் னைக் காணலாம்" என்று இரகசியமாகக் கூறினன். இவ்

விதமாகத் தேவேந்திரன் அம்முநிவரிடஞ் சொல்லி விடைபெற்று அவருக்குச் செய்யவேண்டிய மரியாதைக ளைச் செய்துவிட்டுக் குதிரைபூட்டிய தனது இரதத்திலே றித் தேவலோகஞ்சென்றான். அவன் போனபின்பு, இரா கவர் சீதையையும் லக்ஷ்மணரையும் தம்முடன் அழைத் துக்கொண்டு அக்கினிஹோத்திர சாலையில் உட்கார்ந் திருந்த சரபங்கமுநிவரின் சமீபம் போ னார். இராமர் லக்ஷ்மணர் சீதை மூவர்க ளும் முநிவரின் பாதங்களில் வணங்கி, அவருத்தரவு பெற்றுக்கொண்டு, அவர் இட்ட ஆசனங் களில் உட்கார்ந்து, அவரால பூஜிக்கப் பட்டார்கள். பிறகு, இராமர் சரபங்கரைப் பார்த்து இந்திரன் வந்த தைப்பற்றி வினவ, முநிவரும் அச்சங்கதி முற்றையும் சொன்னார். "அப்பா இராமா, என்னை இந்திரன் பிரமலோகத்துக் கழைத்துப்போக வந்தனன். மற்றவர் களால் ஒருபொழுதும் ஜெயிக்கமுடியாததை நான் என் னுடைய தவத்தால் வென்றிருக்கிறேன். ஓ புருஷ வீரா, தாங்கள் எனக்கு வெகு சமீபத்தில் வந்திருப்ப தாக நான் தெரிந்துகொண்டபடியால் பெரியரான அதிதி யாகவந்த தங்களைக்காணமல் நான் பிரமலோகம் போகக் கூடாதென்று நின்றுவிட்டேன். இனி மகாத்துமாவாயும் தர்மசீலராயுமுள்ள தங்களைக் கண்டபிறகு நான் தேவர் களால் சேவிக்கப்படும் திரிதிவலோகம் போகப்போகி றேன். நான் அழிவற்ற பிரமலோகம் நாகபிருஷ்டம் என்ற உலகங்களைப் பெற்றிருக்கிறேன். எனக்குரியன வாகிய இவைகளைத் தாங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று சரபங்கமகாரிஷி சொல்லலும், எல்லாச் சாஸ்தி ரங்களையும் நன்றாகக் கற்றறிந்த இராகவர் அவரைப்பார் த்து "ஐயா மகரிஷியே, நானே இவ்வுலகங்களை எனக் குத் தேடிக்கொள்ளுகிறேன். அப்படி முடியாவிட் டால் தங்கள் சொற்படி அங்கீகாரம் செய்துகொள்கி

சரபங்கரைக் காணல்.

றேன். இப்பொழுது இக்காட்டில் வந்திருக்கும் எனக்கு நான் வசிக்கவேண்டிய இடத்தைக் குறிப்பிக்கும்படி தங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்" என்றனர். இவ்விதமாக இந்திரனுக்கொப்பான பலமுள்ள இராமர் சொல்ல வெகு புத்திமானாகிய சரபங்கர் கேட்டு மறுபடியும் "ஓ இராமா, இந்த அரணியத்தில் தார்மிகரும் வெகு காந்திபொருந்தியவரும் மகாத்துமாவுமாகிய சுதீக்ஷணர் என்ற தபோதனர் வசித்துக்கொண்டிருக்கிறார். அவரிடம் தாங்கள் சென்றால் அவர் தங்களுக்கு வேண்டிய நன்மையைச் செய்துவைப்பார். தாங்கள் சுதீக்ஷணரென்ற அருந்தவரிடஞ் சென்றதும் அவர் தாங்கள் வசிக்கத்தகுந்த ரமணீயமான ஆச்சிரமத்தைத் தங்களுக்குக் குறிப்பித்துக் காட்டுவார். அநேக புஷ்பங்கள் பூத்து விளங்கிக்கொண்டோடும் மந்தாகினி நதிக்கு எதிர்முகமாகத் தாங்கள் அதன் கரையோரமே சென்றால் அம்முநிவர் ஆச்சிரமத்துக்குப்போகலாம். இதுதானதற்கு வழி. ஆனால், புருஷசிரேஷ்டரே, ஒருமுகூர்த்தகாலம் என்னைப்பாரும்; பாம்பு தனது பழைய தோலைக் கழற்றிவிடுவதுபோல நான் என் தேகத்தை நீத்துவிடப்போகின்றேன்" என்று வேண்டினர். இவ்வாறு சொன்னபின்பு அக்கினியை நன்றாக மூட்டிச் சாஸ்திரப்பிரகாரம் ஹோமம் பண்ணி முடித்துக் கொழுந்துவிட்டெரியும் அவ்வக்கினியின்மத்தியில் அம்மகா காந்தி பொருந்திய சரபங்க முனிவர் பிரவேசித்தார். அவ்வக்கினி அவருடைய உரோமம், தலைமயிர், உடம்புமேலிருந்த தோல், எலும்பு, மாமிசம், இரத்தம் என்னும் இவைகளையெல்லாந் தகித்தது. அதை இராமரும் லக்ஷ்மணரும் சீதையும் பார்த்து மிகவும் ஆச்சரியமடைந்தார்கள். உடனே சரபங்கர் அவ்வக்கினிமத்தியில் இருந்து அக்கினிக்கொப்பான ஒரு சிறுபிள்ளையாய் எழுந்து ஆகிதாக்கினிகள், இருடிகள், மகாத்துமாக்கள், தேவர்கள் முதலியோர்

சரபங்கர் தீப்புகல்.

தங்கள் தங்கள் புண்ணியங்களால் அடைந்திருக்கும் உலோகங்களையெல்லாம் கடந்துசென்று பிரமலோகத்தைப் போயடைந்தார். அநேக புண்ணியங்களைப் பண்ணிய அவ்வந்தண சிரேஷ்டர் அவ்வுலகத்தில் பிரமதேவர் தமது பரிவாரங்களுடன் இருப்பதைக் கண்டார். பிரமதேவரும் அவரைக் கண்டு சந்தோஷமடைந்து அவரை நல்வரவுகூறினார்.

ஆறாஞ் சருக்கம்.

சரபங்கமகரிஷியின் ஆச்சிரமத்திலிருந்த ரிஷிகளெல்லோரும் இராமரைச் சரணமடைந்து ராக்ஷசர்களின் உபத்திரவத்தை நீக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்ளல்.

சரபங்கமுநிவர் தேவலோகஞ்சென்றபின், தமதுகாந்தியால் பிரகாசித்துக்கொண்டிருந்த இராமரிடம் அங்கிருந்த ரிஷிகணங்கள் எல்லாம் ஒன்றாகச்சேர்ந்துவந்தார்கள்.

முநிவர் வகை.

வைகானசர்கள், அங்குஷ்டப் பிரமாணம் உயரமுள்ள வாலகில்லியர்கள், எப்பொழுதும் ஸ்நானம்பண்ணித் தங்களுடைய தேகத்தை இடைவிடாது சுத்தமாக வைத்துக்கொண்டு தவம்புரியும் ஸம்பிரக்ஷாளர்கள, சந்திரசூரிய கிரணங்களையே குடித்துக்கொண்டு சீவிக்கும மரீசிபர்கள், எப்பொழுதும் தங்கள்தேகத்தைக் கற்களில் மோதிக்கொண்டு தவம்புரியும் அச்சமகுட்டர்கள் பலர், உதிர்ந்தசருகுகளைப் புசித்துக்கொண்டு தவம்புரியும் பத்திராசனர்கள், பற்களாலே தானியங்களைக் கொறித்துப் புசிக்கும் தந்தோலூகலர்கள், எப்பொழுதும் தலைக்குக்கீழ்ப்பட்ட ஜலத்தில் நின்றுகொண்டு தவம்பண்ணும் உன்மஜ்ஜகர்கள், தூங்கும்பொழுதெல்லாம் தலையைத் தங்கள் தோளின்மேலேயே வைத்

முனிவர்கள் முறையீடு.

துத் தூங்கும் விரதமுள்ள காத்திரசய்யாக்கள், தூங்கா விரதிகளாகிய அசய்யாக்கள், காற்று மழை வெயில் என்பவைகளொன்றுக்கும் பயப்படாமல் எப்பொழுதும் வெட்டவெளியில் அலைந்துதிரிந்துகொண்டு தவம்புரியும் அநவகாசிகர்கள், ஜலமொன்றையே குடிப்பவர்களான சலிலாகாரர்கள், காற்று ஒன்றையே புசிப்பவர்களான வாயுபக்ஷர்கள், மரங்களின்மேலேயே வசிப்பவர்களான ஆகாசநிலயர்கள், யாகபூமியிலுள்ள மண்மேடையிலேயே படுத்துக்கொள்ளும் தண்டிலசாயிகள், ஒருவித ஆகாரமுமில்லாமல் புசிப்பென்பதையே விட்டுவிட்டுத் தவம்பண்ணும் ஊர்த்தவாசிகள், பொறுமையுள்ளவர்களாய் எப்பொழுதும் ஈரத்துணி உடுத்துக்கொண்டு தவம்புரியும் ஆர்த்திரபடவாசர்கள், எப்பொழுதும் ஜபத்தையே பிரதானமாகக் கொண்ட ஜபர்கள், பஞ்சாக்கினி வளர்த்து அவைகளின் மத்தியில் வெயிற்காலத்தில் உட்கார்ந்துகொண்டு தவம்புரியும் பஞ்சதபர்கள், இவர்களெல்லாரும் பிரமதேஜஸுடன் விளங்காநிற்க இடைவிடாத யோகநிஷ்டையால் ஏகாக்ரசித்தர்களாகச் சரபங்கமகரிஷியின் ஆச்சிரமத்திலுள்ள இராமரிடம் வந்துசேர்ந்தார்கள். தர்மக்ஞர்களான தவத்தோர் கூட்டங்கள் சிரேஷ்டமான தர்மத்தை அறிந்த இராமரைநோக்கி "ஐயா, தாங்கள் இக்ஷ்வாகு குலத்திற்கும் இவ்வுலகத்திற்கும் முதல்வராயும் யஜமானராயும் இருக்கிறீர்கள். தேவர்களுக்கெல்லாம் எவ்வாறு இந்திரன் யஜமானோ அதுபோல் எங்களுக்கெல்லாம் யஜமான் தாங்களே. தங்களுடைய புகழும் பராக்கிரமமும் மூவுலகத்திலும் பரவியிருக்கின்றன. அவைகளைப்போலவே, தந்தை சொல்லில் தாங்கள் வைத்திருக்கும் கௌரவமும் உண்மையும் தருமமும் தங்களிடம் விளங்குகின்றன. நாங்கள் யாசகர்களாக மகாத்துமாவான தங்களை அடைந்து சொல்லப்போகிறதைக் கேட்டுத் தாங்கள் எங்களை மன்னிக்க

வேண்டும். தனது குடிகளிடமிருந்து ஆறிலொருகடமை வாங்கிக்கொண்டு அவர்களைத் தனது பிள்ளைகளைப்போல ரக்ஷிக்காத அரசனது பாவம் மிகவும் பெரிது. அப்படி யில்லாமல் எந்த அரசன் தன்னுயிரைப்போலவும் அவ் வுயிரினு மினிய தனது சொந்தப்பிள்ளைகளைப்போலவும் குடிகளைப் பரிபாலனம்பண்ணுவதிலேயே எப்பொழுதும் கவலையுள்ளவனாக விருந்து தன்னாட்டிலுள்ளவர்களைக் காப் பாற்றிவருகிறானோ அவன் அநேகவருஷங்கள் இவ்வுலகத் தில் அழியாதிருக்கும் புகழைப்பெற்றுப் பிறகு பிரம லோகத்திலும் பெருமை பெறுவான். காட்டில் கனிகளை யுங் கிழங்குகளையும் புசித்துக்கொண்டு தவம்புரியுந் தவத் தினர்களை எந்த அரசன் காப்பாற்றுகிறானோ அவன் அத் தவத்தினர்களுடைய தவத்தில் நான்கிலொரு பாகத்தைக் கடமையாகப்பெறுவான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்பொழுது தங்கள்முன் வந்துள்ள வானப்பிரஸ்த நிலை யில் நின்றொழுகும் அந்தணர்களெல்லாம் தங்களையே சரணமாக அடைந்திருந்தபோதிலும், அநாதைகள்போல ராக்ஷசர்களுபத்திரவத்தால் இக்காட்டில் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஐயா, எங்களுடன்கூடவந்து வெகு கொடியவர்களான இவ்வரக்கர்களால் பலவாறு கொல்லப் பட்ட பரிசுத்தர்களாகிய அளவிறந்த அருந்தவர்களுடைய சரீரங்களைப் பாருங்கள். இதேமாதிரி உபத்திரவங்களையே பம்பாநதிக் கரையிலும் மந்தாகினி நதிக்கரையிலும் சித் திரகூடபருவதத்திலும் வசிக்கும் ரிஷிகளும் அனுபவித் துக்கொண்டு வருகிறார்கள். கொடிய செயல்களையே நோன்பெனக் கருதியிருக்கும் அரக்கர்கள் இவ்வனத் தில் ரிஷிகளுக்குச் செய்யுந் தீமைகளைப் பார்த்து எங்க ளால் சகிக்கமுடியவில்லை. ஆகையால் நாங்களெல்லாரும் யாவருஞ் சரணமென்றடையுந் தங்களை இப்பொழுதுசரண மாக அடைந்திருக்கிறோம். ஐயா இராஜகுமாரரே, எங்க

ளெல்லாரையும் இவ்வரக்கர்களுடைய உபத்திரவத்திலிரு
க்து நீக்குவது தங்கள்கடமை. தாங்களே எங்களை ரக்ஷிக்க
வேண்டும். தங்களைவிட எங்களை இவ்வுலகத்தில் ரக்ஷிக்கக்
கூடியவர் வேறொருவருமில்லை" என்று இவ்வாறு ஒருங்
கே முறையிட்டார்கள். தருமாத்துமாவாகிய இராமர் அத
னைக்கேட்டு அவ்வருந்தவர்களை நோக்கி "முனிவர்களே,
இவ்வாறு என்னை நீங்கள் வருந்திக்கேட்டு
க்கொள்ளுவது நியாயமன்று. நானோ உங்க
ளால் கட்டளையிடப்பட வேண்டியவன்.

இராமர் அபயம் கொடுத்தல்.

நான் இக்காட்டுக்கு வந்தது இராக்கதர்களிடமிருந்து உங்
களைப் பாதுகாக்கவேண்டுமென்ற என் சொந்தக்காரிய
மாகவே. அதனுடன் தற்செயலாக என் தந்தைவாக்கை
நிறைவேற்றி வைக்கும் கடமையுஞ் சேர்ந்திருக்கிறது.
ஆகையால், நானிப்பொழுது தற்செயலாக இங்கு வந்தி
ருப்பது உங்கள் மனோரதங்களை நிறைவேற்றிவைக்கும்
பொருட்டேயென் றெண்ணுகிறேன். என் வனவாசமும்
இதனால் வெகு பயனுள்ளதாக முடியும். அருந்தவர்களு
டைய சத்துருக்களாகிய அரக்கர்கள் எல்லாரையும் யுத்தத்
தில் மடியச் செய்கிறேன். தவத்தையே பொருளாகக்
கொண்டிருக்கும் நீங்கள் என் வலிமையையும் என் தம்பி
யின் வலிமையையும் பார்க்கப்போகிறீர்கள்" என்றனர்.

இவ்வாறு தருமத்திலேயே உறுதியான புத்தியுள்ள
இராமர் தமது தம்பி லக்ஷ்மணருடன் தம்மைக் காண
வந்த ரிஷிகளுக்கெல்லாம் அபயங்கொடுத்து, அவர்களெல்
லாருஞ் சூழ்ந்துவரச் சுதீக்ஷணமாமுனிவரின் ஆச்சிரமத்
துக்குப் புறப்பட்டார்.

ஏழாஞ் சருக்கம்.

இராமர் சுதீக்ஷணருடைய ஆச்சிரமத்துக்குச் சென்றது.

இராமர் தமது தம்பியுடனும் சீதையுடனும் கூட வந்த அவ்வந்தணர்களுடனும் சுதீக்ஷணருடைய ஆச்சிரமத்துக்குப் புறப்பட்டார். அவர் நெடுந்தூரம் நடந்து சென்று, நன்றாக நீர் நிரம்பியோடும் அனேக நதிகளைக் கடந்து, ஒரு பெரிய மேகம்போல் உயரமாக விருந்த விசாலமான ஒருமலையைக்கண்டார். அங்கிருந்து இக்ஷ்வாகு வம்ச சிரேஷ்டர்களான இராமலக்ஷ்மணர்கள் சீதையுடனே அநேக விதமான மரங்களடர்ந்த ஒரு பெருங்காட்டில் புகுந்தார்கள். நிரம்பப்பூத்தும் பழுத்துமிருக்கும் அநேகமரங்கள்செறிந்த அந்தப்பயங்கரமான வனத்தில் கொஞ்சத்தூரஞ் சென்று, அதிலொருபக்கத்தில் மரவுரிகளாலும் மாலைகளாலும்விளங்கும் ஓர் ஆச்சிரமத்தை இராமர்கண்டார்.

சுதீக்ஷணரைக் காணல.

அங்கே அழுக்கு நிரம்பிய ஜடைகளையுடையவராய் உட்கார்ந்திருந்த தவத்தாற்பெரிய சுதீக்ஷணரிடம் இராமர் சென்று "பகவானே, நான் இராமன்; தங்களைத்தரிசிக்க இங்குவந்திருக்கிறேன். தருமத்தை அறிந்தவரே, உண்மையான பராக்கிரமம் படைத்தவரே, என்னை ஆசீர்வதியுங்கள்" என்று வேண்டினர். உடனேஅவர் வீரரும் தருமத்தையறிந்தவர்களுக்குள் உத்தமருமான இராமரை உற்றுப்பார்த்துச் சந்தோஷத்தால் அவரைத்தழுவி "இராமா, வீரனே, தருமத்தை ஆராய்ந்து நடத்துகிறவர்களுக்குள் உத்தமனே, தங்கள்வரவு நல்வரவாருக. தாங்கள் இங்கு வந்ததால் ந்த ஆச்சிரமம் யஜமானனைப் பெற்ற ஆச்சிரமமாய்விட்டது. பெரும் புகழ்பெற்றவரே, நான் தங்கள்வரவை எதிர்பார்த்துக்கொண்டே என்னுடைய இந்தத்தேகத்தை இவ்வுலகத்தில் விட்டுவிட்டுத் தெய்வலோகத்துக்குப் போகாமல் இருந்தேன். தாங்கள் தங்களுக்குக் கிடைக்கவேண்

டிய இராச்சியத்தை இழந்துவிட்டுச் சித்திரகூடம் வந்து வசித்திருந்தது எனக்குமுன்னரே தெரியும். நூறுயாகங்கள் பண்ணிமுடித்த தேவேந்திரன் இங்கு வந்திருந்தான்; நான் என்னுடைய புண்ணியகருமங்களால் இங்கு எல்லா உலகங்களையுஞ் செயித்துவிட்டதாகச் சொன்னான். தேவரிஷிகளும் இன்னும் மற்ற ரிஷிகளும் நிரம்பியிருக்கும் அவ்வுலகங்களை நான் எனது சக்தியால் தங்களுக்குக் கொடுக்கிறேன். தாங்கள் அவைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைச் சீதாலக்ஷ்மணர்களோடு அனுபவியுங்கள்" என்று கூறினர். இவ்வாறு சொல்லிய கடோரமான தவத்தை உடையவரும் உண்மையையே உரைப்பவருமான அம்முனிவரைநோக்கி, பிரமதேவரைப் பார்த்துக் காசியபமகரிஷி சொல்லுவதுபோல, ஆத்தும ஞானமடைந்த இராமர் "ஐயா முனிவரே, நானே சுவயமாக அவ்வுலகங்களை எனக்குத் தேடிக்கொள்ளுகிறேன். இப்பொழுது தங்களை நான் இக்கானகத்தில் வசிக்கவேண்டிய ஆச்சிரமத்தை எனக்குக் குறிப்பிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். தாங்கள் எல்லாருடைய க்ஷேமத்தையும் நாடியிருப்பவரென்றும், எல்லாப்பிராணிகளிடத்திலும் அன்பும் ஆதரவும் பொருந்தியவரென்றும் மகாத்துமாவாகிய கௌதம சரபங்கர் சொன்னார்" என்றார். அதைக்கேட்டு, உலகம் எங்கும் புகழ்பெற்ற அம்மகரிஷி மிக்க சந்தோஷமடைந்து, வெகு மதுரமான சொற்களால் "இராமா, தங்களுக்கு இதுதான் உத்தமமான ஆச்சிரமம்; தாங்களிவ்விடத்திலேயே வசிக்கவேண்டும்; இவ்விடத்தில் ரிஷிகள் அநேகர் வசித்துக்கொண்டிருக்கிறார்கள். இங்கே காய் கனிகளும் கிழங்குகளும் எப்பொழுதும் நிரம்பியிருக்கும். ஐயா பெரும்புகழ் பெற்றவரே, இவ்வாச்சிரமத்தில் அநேக மான்கூட்டங்கள் பயமில்லாமல் வந்து

சுதீக்ஷணரை இருக்க இடம் வினாவல்.

தீக்ஷணர் இடங்கூறல்.

துள்ளிவிளையாடி அங்கு மிங்கும் அலைந்து, தவம்புரியும் ரிஷிகளின்மனத்தைத் தங்களுடைய அழகிய சேஷ்டைக ளால் கலைத்துப்போடுகின்றன. இப்படி உண்டாகும் பயத் தைத் தவிர வேறொருவிதமான பயமும் இவ்விடத்தி லில்லை" என்றுசொல்லினர். இவ்வாறு அம்மகரிஷிசொன் னதை லக்ஷ்மணருக்கு மூத்தவரான இராமர் கேட்டுத் தாம் வெகு தைரியசாலியாகையால் நாண்பூட்டிய தமது வில்லைக் கொஞ்சமிழுத்துப் பாணத்தை அதில் சந்தித்து "ஐயா பெருமைதங்கிய முநிவரே, இடிபோன்ற கூர் மையான எனது பாணங்களால் அவ்வாறு வரும் மான் கூட்டங்களை நான் கொல்லுவேனாகில் அதைப்பார்ப்பதை விடக் கஷ்டம் தங்களுக்கு வேறொன்றுமிராதே. ஆகை யால் இந்த ஆச்சிரமத்தில் நான் அதிகமாகத் தங்கமுடி யாதுபோலிருக்கிறதே" என்று அம்முநிவரைப் பார்த் துச் சொல்லிவிட்டு, அதன்மேல் தமது சந்தியாவந்த னத்துக்குச் சென்றார். அவர் சாயஞ் சந்தியைச் செய்து முடித்து அவ்வாச்சிரமத்திலேயே சீதாலக்ஷ்மணர்களோடு அன்றிரவு தங்கினார். சந்தியாகாலம்போய் இரவு வந்தவு டன் அப்புருஷசிங்கங்களுக்குச் சுதீக்ஷ்ணமுநிவர் துறவி கள் புசிக்கும் ஆகாரத்தை வெகுசந்தோஷமாகக் கொண்டு வந்து கொடுத்து அவர்களுக்குச் செய்யவேண்டிய மரியா தைகளை ஒன்றும் விடாமல் செய்தார்.

எட்டாஞ் சருக்கம்.

தண்டகாரணியத்திலிருந்த ஆச்சிரமசமூகத்தை இராமர் பார்ப்பதற்காகப் புறப்படுதல்.

இவ்வாறு சுதீக்ஷ்ணமகரிஷியால் நன்றாக உபசரிக்கப் பட்டு இராமரும் லக்ஷ்மணரும் அன்றிரவைச் சுகமாக அவ்வாச்சிரமத்தில் கழித்துக் காலையிலெழுந்தார்கள். அதி காலையிலெழுந்து தாமரை மலரின் மணம் வீசும் ஜலத்தில்

இராமர் ஸ்நானம் செய்தார். பிறகு அவ்வாச்சிரமத்தில் இராகவர் லக்ஷ்மணரோடுஞ் சீதையோடும் அக்கினி, தேவர்கள், பிதிருக்கள் இவர்களுக்குச் செய்ய வேண்டிய பூசைகளைச் செய்துமுடித்து, உதிக்குஞ் சூரிய பகவானைக்கண்டு அவரை உபாசித்து, அதன்பிறகு சுதீக்ஷணர் உட்கார்ந்திருந்த இடத்துக்கு வந்து அவரைப் பார்த்து "ஐயா பகவானே, தங்களாதரவால் ஒருவிதமான குறைவுமின்றி நேற்றிரவு இங்குச் சுகமாகத் தங்கியிருந்தோம். இப்பொழுது தங்களிடம் விடைபெற்றுப் போக வந்திருக்கிறோம். முநிவர்கள் எங்களை அவசரப் படுத்துகிறார்கள். எங்களுக்கும் அக்கானகத்தில் இருக்கும் ஆச்சிரம சமூகங்களைப் போய்ப் பார்த்துவரும் ஆவலதிகமாக இருக்கிறது. எங்களுக்கும் இவ்விடம் வந்திருக்கும் தண்டகாரணிய வாசிகளாகிய அருந்தவர்களுக்கும் தாங்கள் விடைகொடுத்தனுப்பவேண்டும். தர்மத்தையே எப்பொழுதுங் கைப்பற்றிப் புகையற்ற அனல்போல விளங்கும் இம்முநிவர்கள் உள்பட நாங்கள் விடைபெற்றுக்கொள்கிறோம். கெட்டவழியால் வந்த சம்பத்தை அடைந்து நெறிநீங்கி அலையும் அற்பன்போல் சகிக்கமுடியாத வெயிலால் சூரியபகவான் பிரகாசிக்கு முன் நாங்கள் புறப்படவேண்டும்" என்று சொல்லி இராகவர் சீதாலக்ஷ்மணர்களோடு அம்முநிவரின் பாதங்களில் வணங்கினார். அவ்வாறு வந்தனம் பண்ணிய இராமரை அம்முநிவர் தமது கைகளால் தூக்கி இறுகத் தழுவி "இராமா, தங்களுக்கு எவையேனும் தீங்குகள் வருமாயின் அவைகள் வந்தவழியே போகட்டும். தாங்கள் லக்ஷ்மணரோடும் தங்களுடைய நிழல்போல் தொடரும் சீதையோடும் தண்டகாரணியத்தில் வசிக்கும் முநிவர்களின் அழகான ஆச்சிரமங்களைப் போய்ப்பார்த்து வாருங்கள், தவத்தால் பரிசுத்தமாகப் பண்ணப்பட்ட

இராமர் தண்டகாரணியம்போக விடை பெறல.

ஆத்துமாவையுடைய இவ்விருஷிகளின் ஆச்சிரமங்களில் பழங்களையும், கிழங்குகளையும், பூத்திருக்குங் காடுகளையும், சாதுவாகத் திரிந்துகொண்டிருக்கும் மான்களையும், வெகு சாந்தகுணமுள்ள பறவைகளையும், புஷ்பித்திருக்குந் தாமரைகளால் விளங்கும் ஓடைகளையும், தெளிந்திருக்கும் ஜலத்தையும், காரண்டக மென்னும் நீர்காக்கைகள் கொஞ்சி விளையாடிக்கொண்டிருக்கும் தடாகங்களையும், ஸரசுகளையும், இன்னும் பார்ப்பதற்கு மிகவும் அழகாக விருக்கும் அருவிகளையும் தாங்கள் காண்பீர்கள். இவைகளையன்றி மயில்கள் கூவும் வெகு அழகான காடுகளையும் தாங்கள் காணலாம். அப்பா லக்ஷ்மணா, நீயும் போய்வா. இவைகளையெல்லாம் பார்த்துவிட்டு மறுபடி என்னுடைய ஆச்சிரமத்துக்கே தாங்களெல்லாரும் திரும்பிவரவேண்டும்" என்றனர். இவ்வண்ணம் அம்முனிவர் சொன்னதைக் காகுத்தர் கேட்டு அப்படியே ஆகட்டும் என்று ஒப்புக்கொண்டு லக்ஷ்மணரோடும் சீதையோடும் அவரை வலம் வந்து அவரிடம் விடைபெற்றுப் புறப்பட்டார். அப்பொழுது சீதை அவ்விரு சகோதரர்களுக்கும் அவர்களுடைய அழகான வில்லுகளையும் பாணங்களையும் பளபளவென்று பிரகாசிக்குங் கத்திகளையுங் கொடுத்தாள். உடனே தங்கள் அம்பறாத்தூணிகளை அழகாகக் கட்டி ரீங்காரம்பண்ணும் தங்கள் விற்களைக் கையிலேந்தி அவ்விரு அழகான பாக்கியசாலிகளும் தங்கள் காந்தியால் விளங்கிக்கொண்டு சீதையுடன் அவ்வாச்சிரமத்தைவிட்டுப் புறப்பட்டார்கள்.

ஒன்பதாஞ் சருக்கம்.

இராக்கதர்களை வதைக்க இராகவர் செய்த பிரதிக்ஞை விஷயமாகச் சீதை செய்துகொண்ட விண்ணப்பம்.

சுதீக்ஷ்ணரிடமிருந்து விடைபெற்றுப் புறப்பட்ட தனது நாயகரைச் சீதைபார்த்து, தான் அவரிடம் வைத்

திருந்த அபிமானத்தால் தன்னுள்ளத்தில் இருந்த சில விஷயங்களைப்பற்றிப் பேச ஆரம்பித்தாள். "தாங்கள் இப்பொழுது மேற்கொண்டிருக்கிற முனிவர்களுடைய தர்மமானது வெகு சூக்ஷ்மமான வழியால் அடையவேண்டியதாக இருக்கிறது. ஆகையால் அது தன்னிஷ்டப்படி நடப்பதிலிருந்து விலகித் தர்மப்படி நடப்பவர்களுக்குத்தான் கிடைக்கும். இவ்வுலகததில் ஒருவன் தன் மனத்தை அதன் போக்குப்படி விட்டுவிடுவதால் விளையுந் துன்பங்கள் மூன்று என்றுசொல்லப்படுகின்றன. இம்மூன்று துன்பங்களுள் வெகுகொடியது பொய்பேசுதல்; அதினும் கொடியவை மற்றையவிரண்டும். அவைகள் பிறர்மனை விழைதல், பகைமையின்றி ஒருவனை வருத்தல் என்பன. என் நாதா, இவைகள மூன்றினுள் பொய்பேசுதல் என்பது தங்களிடமு சிறிதும் இல்லை; இனிமேலு முண்டாகாது. எல்லாவித தருமங்களையும் ஒருகொடியில் அழித்துவிடுவதாகிய பிறர்மனைவிழைதலென்பது தங்களிடத்தில் கனவிலும் கிடையாது. ஓ மனிதசிரேஷ்ட, தங்களுக்கு இவ்விதமான பாவம் ஒருபொழுதும் எள்ளளவு மில்லை; இனி யுண்டாகவும் மாட்டாது. தாங்களெப்பொழுதுந் தங்களுடைய தாரத்தினிடமே சந்தோஷமடைந்துகொண்டு தருமநெறி தவறாது, உண்மையே பேசி, தங்கள தந்தையிட்ட கட்டளையை நிறைவேற்றுபவர் என்பது நான் நன்றாக அறிவேன். ஐயா, லக்ஷ்மணருக்கு முன்பிறந்த சத்தியமுள்ளவராயும் மகாபாக்கியமுள்ளவராயும் சீமானாயும் இருக்கும் இராகவா, தங்களிடம் சத்தியமுந் தருமமும் எந்நாளும் நீங்காது நிலைநிற்குமென்பதையும், ஐம்புலன்களையும் நன்றாக அடக்கிய தாங்களே இவ்விரண்டு புண்ணியங்களையும் தரித்துக்கொண்டிருக்க வல்லவர் என்பதையும் நான் நன்றாக அறிவேன். மூன்றாவது தீமையென்று நான் குறித்த பகைமையின்றி ஒருவனை இம்சித்தலாகிய பாவம்

சீதையின் விண்ணப்பம்.

தங்களை ஒருகால் எங்குவந்து அணுகிவிடுமோ என்ற பயத்திற்கிடம் இப்பொழுது வந்திருக்கிறது. தண்டகாரணியத்தில் வசிக்கும் முநிவர்களைக் காப்பாற்றும்பொருட்டுத் தாங்கள் யுத்தத்தில் ராக்ஷசர்களைக் கொன்றுவிடுகிறேன் என்று அவர்கள்முன் பிரதிக்ஞை பண்ணிக்கொண்டீர்கள். என் வீரரே, இக்காரணத்தினாலே தாங்கள் லக்ஷ்மணருடன் வில்லையும் பாணத்தையும் சித்தம் பண்ணிக்கொண்டு இத்தண்டகையென்ற காட்டுக்கு வந்திருக்கிறீர்கள். இவ்வுறுதியுடன் தாங்களிங்கு வந்திருப்பதையும் தங்கள் மனவலியையும் தங்களுக் கிவ்வுலகத்திலும் மேலுலகத்திலும் உண்டாகவேண்டிய புகழையும் யோசித்து யோசித்து என்மனங் கொஞ்சங் குழம்புகிறது. தாங்கள் தண்டகைக்குச் செல்வது என் மனத்திற்கு ஏற்கவில்லை. அதற்கு நான் காரணஞ் சொல்லுகிறேன், சிறிது கேட்கவேண்டும். தாங்களோ தங்கள் கையில் வில்லும் பாணமும் பிடித்துக்கொண்டு தங்கள் தம்பியுடன் இக்காட்டுக்கு வந்திருககிறீர்கள். எப்பொழுதாவது இக்காட்டில் தாங்கள் அரக்கர்களைக் கண்டால் அவர்கள்மேல் பாணம் செலுத்தும்படி தோன்றும். அப்படியே தாங்கள் பாணத்தைச் செலுத்திவிடுவீர்கள். ஏனெனில் நெருப்பினயலில் விறகிருப்பதுபோலதான் க்ஷத்திரியர்கள் கையில் வில்லிருப்பதும். சமீபத்தில்மட்டும் இருந்துவிட்டால் நெருப்பு எப்படி அவ்விறகைக் கொளுத்தாமல் விடாதோ அதுபோல க்ஷத்திரியர்கள் கைவில்லும் கிட்டவருங் கொடியவன்மேல் பாணத்தை விடாமலிராது. முன்னொருகாலத்தில் உண்மை உரைப்பதில் புகழ்பெற்ற நோன்பினராகிய தபசியொருவர் அநேக கொடிய விலங்குகளாலும் பறவைகளாலும் நிரம்பிய ஓர் அரணியத்தில் தவம்புரிந்துகொண் டிருந்தார். அவர் புரிந்துவந்த தவத்தைக்கண்டு இந்திரன் நடுங்கி அத்

கத்தியின் சகவாசத்தால் தவமிழந்த முநிவர் கதை.

தவத்துக்கிடையூறியற்றக் கருதினான். உடனே அவன் ஒரு போர்வீரனுடைய வேஷம் தரித்துத் தனது கையிலொரு கத்தியை ஏந்திக்கொண்டு அவ்வாச்சிரமத்துக்கு வந்து "இக்கத்தியைத் தாங்கள் இவ்வாச்சிரமத்தில் நான் மறுபடி வந்து கேட்கிறவரையில் வைத்திருங்கள்" என்று சொல்லி அம்முனிவரிடங் கபடமாகக் கொடுத்துவிட்டுப் போனான். இவ்வாறு ஒப்பிக்கப்பட்ட கத்தியை அடைந்தபின் அவ்வி ருஷியும், எங்கு யாராவது கத்தியைத் திருடிக்கொண்டு போய்விடுவார்களோ என்ற பயத்தால், தாம் காட்டில் போய்ச் சஞ்சரிக்கும் வேளைகளிலெல்லாம் அதை எடுத்துக் கொண்டே சஞ்சரித்தனர். தமக்குவேண்டிய கனிகளை யுங் கிழங்குகளையும் கொண்டுவர முனிவர் காட்டுக்குப் போகும்பொழுதெல்லாம் அக்கத்தியைத் தம்முடனேயே கொண்டுபோவார். அக்கத்தியின்றி அவர் ஒருபொழுதும் வெளியே போனதேயில்லை. இவ்வண்ணம் நாள் தப்பா மல் அவர் கத்தியுங் கையுமாக எப்பொழுதும் இருந்தமை யால் அவர் புத்தி தவத்திலிருந்து கொஞ்சங்கொஞ்சமாக விலகிக் கொடுந்தொழில்களின்மேற் சென்றது. இவ்வித மாக ஆயுதத்துடன் இடைவிடாது பழகிய சம்பந்தத்தால் அவர் தமது தவம் முழுதும் இழந்து கொடிய செயல் செய் யுங் குணமடைந்து நரகத்தில் வீழ்ந்தார். ஆயுதத்தின் பழக் கத்தால் இக்கொடுமை உண்டாயிற்றென்று ஒரு பழங் கதை இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது. தீயின் அருகில் காய்ந்த கட்டை யிருப்பதுபோல்தான் ஒருவன் கையில் ஆயுதமிருப்பதும். நான் தங்களிடம் வைத்திருக்கும் அன் பாலும் மரியாதையாலும் இப்பொழுது இந்தச்சங்கதியைத் தங்களுக்கு நினைப்பூட்டுகிறேன். தங்களுக்கு நான் புத்தி சொல்ல வந்ததாக ஒருபொழுதும் கருதவேண்டாம். ஆகை யால், கையில் விற்பிடித்த தாங்கள் இந்தத் தண்டகை யிலிருக்கும் அரக்கர்களை வைரமில்லாமல் ஒருபொழு துங் கொல்ல எண்ணவே கூடாது. ஐயா என் வீரசிங்

கமே, குற்றமின்றி ஒருபொழுதும் ஒருவரையுங் கொல்லக் கூடாதென்பது என்னெண்ணம். வீரர்களாயிருக்கும் க்ஷத்திரியர்கள், காட்டில் தவம்புரிந்துகொண்டிருக்குந் தபசிகள் ஏதாவது துன்பப்பட்டால் அத்துன்பத்திலிருந்து அவர்களை ரக்ஷிக்கவேண்டுமென்பது நியாயம். ஆயுதத்துக்கும் தவத்துக்கும் எவ்வளவு தூரம்? க்ஷத்திரிய தருமமெங்கே? காடெங்கே? ஆகையால், க்ஷத்திரியர்களாகிய நாம் காட்டில் தவம்புரிந்துகொண்டிருக்கும்பொழுது இக்காலத்தில் இவ்விடத்தில் நாம் கொண்டிருக்கும் விரதத்துக்குப் பங்கமின்றி நடந்துகொள்ளவேண்டும். என் நாதரே, ஆயுதப்பயிற்சி செய்துகொண்டு காட்டிலிருந்தால் நமது புத்தி கெட்டுவிடக்கூடும். ஆகையால் மறுபடி அயோத்திக்குப் போயின பின்பு நாம் நமது க்ஷத்திரிய தர்மத்தைப் பரிபாலனம் பண்ணலாம். நாட்டைவிட்டுக் காட்டுக்கு வந்திருக்கும் நாம் க்ஷத்திரிய தர்மத்தை ஒழித்துச் சுத்தமான தபசிகள் தர்மத்தை அநுசரித்து வனவாசத்தைச் செய்தோம் என்பதைக் கேட்டால் எனது மாமியார்களும் மாமனாரும் சந்தோஷமடைவார்கள். ஆகையால், நாமிப்பொழுது கேவலம் தர்மமொன்றையே செய்துகொண்டிருக்கவேண்டும். தர்மத்தாற்றான் நமக்கு இலாபமுண்டாகும். தர்மத்தாற்றான் நமக்குச் சுகமும் உதிக்கும். தர்மத்தாற்றான் நமக்கு எல்லாம் உண்டாகும். இந்தச்சகமே தர்மத்தின் ஸாரமாக விளங்குகிறது. ஆகையால், அநேகவித நோன்புகளால் சரீரத்தை உலர்த்தி வாட்டி அறிவுள்ளவர்கள் தர்மந்தேடிக் கொள்ளுகிறார்கள். அப்படியல்லாமல் சுகமாக இருந்தால் நமக்குத் தருமத்தின் சுகமெவ்வாறு கிடைக்கும். ஆகையால், என் அன்பரே, புத்தியை எப்பொழுதும் ஆசாரத்தில் செலுத்தி இத்தபோவனத்தில் தாங்கள் தர்மம் பண்ணுங்கள். இம்மூவுலகத்தினுண்மையையும் தாங்கள் அறிந்தவர்களாயிற்றே. தங்களுக்குத் தெரியாததொன்றுண்

டோ? நானேதோ என் பெண்புத்தியால் கோழைமனத்துடன் சொன்னேன். தங்களுக்குந் தர்மோபதேசம் பண்ண இவ்வுலகத்தில் ஒருவருண்டோ? ஆகையால், தாங்களே நன்றாகத் தங்கள் புத்தியைக்கொண்டு யோசித்துப்பார்த்துத் தாங்களும் தங்கள்தம்பியும் என்ன என்ன செய்யவேண்டுமோ அவற்றைத் தாமதமின்றிச் செய்துவாருங்கள்.”

பத்தாஞ் சருக்கம்.

சரணமென்று தம்மையடைந்த முனிவர்களைக் காப்பாற்றும்பொருட்டு அவர்களுக்கு உபத்திரவம் பண்ணும் அரக்கர்களை வதைப்பதில் தரும வழுவில்லையென்று இராமர் சொல்லுதல்.

தனது கணவனிடம் அன்புவைத்த சீதை பக்தியுடன் சொன்னசொல்லை இராமர்கேட்டு, தாம் தருமத்தைவிட்டு வழுவாதவராகையால் அவளைநோக்கிச் சொல்லுகிறார் :

இராமர் மறுமொழி.

“என் தேவியே, நீ என்னிடம் வைத்திருக்கும் அன்பிற்குத் தக்கபடி, வெகு அனுகூலமாக எவ்வாறு பேசவேண்டுமோ அவ்வாறே பேசினாய் ; ஜனகமகாராஜருடைய மகள் என்பதை நன்றாகக் காட்டி வெகு அழகாக நீ இப்பொழுது தர்மோபதேசம் செய்தாய். சங்கடத்தில் இருப்பவர்களைக் காப்பாற்றவேண்டியதற்காகவே க்ஷத்திரியர்களுக்கு வில் என்ற நினது சொல்லே நீ சொன்னதற்கு மறுமொழி. அதிகமாக வேறொன்றுஞ் சொல்லுவதற்கில்லை. சீதே, தண்டகாரணியத்திலிருக்கும் இவ்வருந்தவர்கள் தாங்களாகவே என்னிடம்வந்து தாங்கள் ஏதோ சங்கடத்திலிருப்பதாகச் சொல்லிக்கொண்டு சரணமடைந்தார்கள். அவர்களோ தங்கள் தருமத்தையே எப்பொழுதும் இடைவிடாமல் நடத்திக்கொண்டு காட்டிலிருக்கும் கனிகளையுங் கிழங்குகளையும் புசித்துக்கொண்டு வசிப்பவர்சளாகையால் எப்

பொழுதும் கொடிய செயல்களையே செய்துகொண்டுவரும் அரக்கர்களைக்கண்டு பயந்தவர்களாய்ச் சுகமென்பது சிறிதும் இல்லாமல் இருக்கிறார்கள். காட்டில் அவர்கள் தவம் பண்ணிக்கொண்டிருக்கையிலேயே நரமாமிசத்தின் சுவையறிந்த இராக்கதர்கள் அவர்களைப் புசிக்கிறார்கள். இவ்வாறு இராக்கதர்களால் புசிக்கப்படும் இந்தத் தண்டகாரணியத்துத் தபசிகள் என்னிடம்வந்து தங்களுக்குக் கருணைபுரியவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள். அவர்களிவ்வாறு சொன்ன சொல்லைக்கேட்டு நானவர்களை உபசரித்து அவர்களை நோக்கி "அந்தணர்காள், என்மீது தயைசெய்யுங்கள். எனக்கு மிகவும் வெட்கமாக இருக்கிறது. நான் தங்களைவந்தடைந்து வேண்டிக்கொள்ளவேண்டியவனாகவிருக்கத் தாங்களெல்லோரும் என்னையடைந்து இப்பொழுது வேண்டிக்கொள்வது என்ன" என்று கேட்டேன். அன்றியும், நான்செயற்குரியதேதென்று அவர்கள் அபிப்பிராயத்தை வினவினேன். அப்பொழுது அவர்களெல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து "ஓ இராமா, நாங்களிந்தத் தண்டகாரணியத்தில் அநேகவிதமாக மாயவேடங் கொள்ளும் அரக்கர்களால் வெகுவிதமாகச் சங்கடப் பட்டுக்கொண் டிருக்கிறோம். அச்சங்கடங்களிலிருந்து தாங்களே எங்களை ரக்ஷிக்கவேண்டும். மாசற்ற இராகவா, அக்கினிஹோத்திர காலங்களிலேயும், தர்சபௌர்ணமாஸ யக்ஞகாலங்களிலேயும் நரமாம்சத்தைப் புசிக்கும் வெகு பலிஷ்டர்களான இவ்வரக்கர்கள் எங்களை நடுங்கவடித்து எங்கள் காரியமொன்றும் நிறைவேறாமல் செய்துவிடுகிறார்கள். இவ்வாறு அரக்கர்களால் உபத்திரவம் பண்ணப்பட்டு எங்கேபோய் யாரைச் சரணமாக அடைந்து பிழைப்போமென்று வழிதேடிக்கொண்டிருந்த தபசிகளாகிற எங்களுக்குத் தாங்களே ரக்ஷகராக வந்திருக்கிறீர்கள். நாங்களே எங்களுடைய தவத்தின் சக்தியால் எளிதில் இவ்வரக்கர்களை நாசம்பண்ணிவிட வல்ல

வர்களென்று தாங்கள் சொல்லக்கூடும். ஆனால், பலநாள் சிரமப்பட்டு ஈட்டிய தவத்தை இவ்வாறு செலவிட எங்களுக்கு மனம் வரவில்லை. தவமென்பது பலவிதமான இடையூறுகளை உடையது. அத்தவத்தை அவ்வாறு இடையூறுகளுக்குள்ளாக்காமல் செய்து முடிப்பது வெகுகஷ்டம். ஆகையாற்றான் இராக்கதர்கள் எங்களைப் புசித்துக்கொண்டிருக்கையிலும் நாங்கள் அவர்களைச் சபிக்காமலிருக்கிறோம். இப்பொழுது தண்டகாரணியத்தில் இருக்கும் இராக்கதர்களால் வரும் சங்கடத்திலிருந்து எங்களைத் தாங்களும் தங்களுடைய தம்பியும் விடுவிக்கவேண்டும். தங்களையன்றி இக்காட்டிலெங்களுக்கு வேறுதலைவர் யார்?" என்றார்கள். நானும் இவ்விதமாக இவர்கள் சொன்ன சொல்லைக் கேட்டு, ஜானகீ, தண்டகாரணியத்தில் வசிக்கும் அருந்தவர்களெல்லோருக்கும் ஒரே வாக்காய் 'உங்களெல்லாரையும் காப்பாற்றுகிறேன்' என்று சொல்லி ஒப்புக்கொண்டுவிட்டேன். என்னுயிர் இருக்கிறவரையில் நான்செய்த பிரதிக்ஞையை ஒருபொழுதும் மாற்றமாட்டேன். முநிவர்களுக்கு வாக்களித்தா நான் மாற்றுவேன்? சத்தியத்தின்மேல் நான் வைத்திருக்கும் அபிமானம் உனக்குத் தெரியுமே. ஒருகால் என் பிராணனை அல்லது நின்னை அல்லது லக்ஷ்மணனை விட்டுவிடவேண்டும் என்றாலும் உடனே விட்டுவிடுவேன்; நான் செய்த வாக்குதத்தத்தை, அதிலும் அந்தணர்களுக் களித்துவிட்டதை, ஒருபொழுதும் நான் கைவிடேன். வைதேகி, முநிவர்களைக் காப்பாற்றுதலென்பது, அவர்களென்னிடம் வந்து என்னை வேண்டிக்கொள்ளாமலே, நானே சுயமாகச் செய்யவேண்டிய கடமையாகவிருக்கிறது; ஒப்புக்கொண்டபிறகு அது அவசியம் பண்ணியே தீரவேண்டுமென்பது சொல்லவும் வேண்டுமோ? நீ இவ்வளவுதூரம் அன்பாலும் நல்ல எண்ணத்தாலுஞ்

இராமர் தான் சொன்ன சொல் தவறேன் என்றது.

சொன்னசொல்லைக்கேட்டு நான் மிக்கசந்தோஷம் அடைந்தேன். அன்பென்பதிருந்தாற்ருன் இவ்வாறு சொல்லத்தோன்றும். அன்பில்லாதவனிடஞ் சொல்லவேண்டியதென்ன இருக்கிறது? நீ சொன்னவைகள் முழுதும் உன் குணத்துக்கொத்தனவாகவும் நீ பிறந்த வம்சத்துக்கும் புகுந்த வம்சத்துக்கும் தகுந்தனவாகவுமிருக்கின்றன; அன்றி என்னுடன்கூட நின்று தருமத்தை நடத்துபவளுக்குத் தக்கதாகவு மிருக்கின்றன. ஆகையால் நீ என் உயிரினும் சிறந்தவளென்று நான் சொல்லவும்வேண்டுமோ?" இவ்வாறு ஜனகருடைய மகளாகிய தனது அன்புள்ள மனைவி சீதையைநோக்கி மகாத்துமாவாகிய இராமர் சொல்லிக் கையில் வில்லை எடுத்துக்கொண்டு லக்ஷ்மணருடன் அநேக அழகான தபோவனங்களின் வழியே சென்ருர்.

பதினென்ருஞ்சருக்கம்.

அநேக ஆச்சிரமங்களைப் பார்த்துக்கொண்டு சுதீக்ஷணரிடம் இராமர் திரும்பிவந்து அகஸ்தியருடைய ஆச்சிரமத்தைப்பற்றி விசாரித்தலும் அவர் மகிமையை லக்ஷ்மணருக்கெடுத்து உரைத்தலும்.

காட்டிற் செல்லும்பொழுது இராமர் முதலிற் சென்ருர்; அவர்பின் மெல்லிய இடையையுடைய சீதை சென்ருள்; அவளுக்குப்பின் ஆயுதபாணியாக லக்ஷ்மணர் சென்ருர். சீதையுடன் அவ்விருவர்களும் பற்பல பருவத சிகரங்களையும், காடுகளையும், அழகான பலநதிகளையும், அந்நதிகளின் மணல்திட்டுகளில் கொஞ்சிவிளையாடும் சாரஸம், சக்கரவாகம் முதலிய பறவைகளையும், நன்ருகப்புஷ்பித்து அநேக நீர்ப்பறவைகளையுடையனவாகி விளங்குங் குளங்களையும், இனம் இனமாகச்சேர்ந்து மேய்ந்துகொண்டிருக்கும் புள்ளிமான்களையும், நன்ருகக் கொழுத்துப் பயங்கரமாய்த் திரியுங் கொம்புகளையுடைய காட்டெருமை

களையும், காட்டுப்பன்றிகளையும், மரங்களை அழிக்கும் மத யானைகளையும் பார்த்துக்கொண்டே போனார்கள். வெகு தூரம் வழிநடந்து சூரியன் அஸ்தமன மாகுங் காலத்தில் அவர்கள் ஒருயோசனை விஸ்தாரமுள்ள பெருந் தடாகமொன்று தாமரை முதலிய புஷ்பங்களின் மணம் நிறைந்தும், யானைக்கூட்டங்களால் அலங்கரிக்கப்பட்டும், ஜலத்தில் சஞ்சரிக்கும் சாரஸம், அன்னம், காதம்பம் முதலிய நீர்ப்பறவைகள் நிறைந்தும் விளங்கிக்கொண்டிருக்கக் கண்டார்கள். தெளிவான நீரால் நிரம்பிய அழகான அத்தடாகத்தில் பாட்டொலியும் பல்லியங்களினொலியும் கேட்டுக்கொண்டே யிருந்தது. ஆனால் அவ்விடத்தில் யாரும் கண்ணுக்குப் புலப்படவே யில்லை. அதைப் பார்த்து மகாபலமபொருந்திய இராமரும் லக்ஷ்மணரும் வியப்புற்றார்கள். தங்களுடன் வந்துகொண்டிருந்த முனிவர்களில் ஒருவராகிய தருமபிருதர் என்பவரைப் பார்த்து இராமர் "இவ்வற்புதத்தைக்கேட்டு எங்களெல்லாருக்கும உண்டான வியப்பு வெகு அதிகமாக விருக்கிறது. இஃது என்ன ஆச்சரியம். இதைத் தாங்கள் சொல்லவேண்டும். இதில் இரகசியமென்பது ஒன்றும் அதிகமாக இல்லாதபக்ஷத்தில் தாங்கள் அகத்தியமாசொல்ல வேண்டும்" என்று வினவினர். இவ்வாறு இராமர் தருமாத்துமாவாகிய அம்முனிவரைப்பார்த்துக் கேட்கவே அவர் அத்தடாகத்தின் உற்பத்தியை விவரமாகச்சொல்லத் தொடங்கினார்: "இது எந்நாளும் வற்றாத பஞ்சாப்ஸரஸ் என்ற பெயருள்ள தடாகம். இதை மாண்டகர்ணி என்ற முனிவர் தமது தவத்தின் மகிமையா லுண்டாக்கினர். அம்முனிவர் வாயுபக்ஷணம் பண்ணிக்கொண்டு அதோ தோன்றும் தடாகத்தில் நின்று பதினாயிரம் வருஷம் கடுந்தவம் புரிந்தனர். அதைக்கண்டு அக்கினி முதலான தேவர்களெல்லாரும்

பஞ்சாபஸரஸ் என்னும் தடாகம்.

பஞ்சாப்ஸரஸின் உற்பத்தி.

கடுநடுங்கி, ஒன்றுகச்சேர்ந்து தங்களுக்குள்ளேயே 'ஓகோ! இத்தபசி நம்முள் ஒருவர் பதத்தை அடையவன்றோ இவ்வாறு தவம்புரிகிறுர்' என்று யோசித்து, வெகுதுயர மடைந்து, அத்தவத்துக்கு ஏதாவது இடையூறு செய்ய வேண்டுமென்று நிச்சயித்தார்கள். உடனே அவர்கள் மண்ணி லியங்கும் மின்னற்கொடிகள்போன்ற வெகு அழகான அப்ஸரஸ்பெண்கள் ஐவரை அம்முநிவருடைய தவத்தைக் கெடுக்கும்படி அனுப்பினுர்கள். தேவர்களுடைய காரியசித்தியின்பொருட்டு அம்முநிவரை அந்த அப்ஸரஸ்பெண்கள் மதனவாதைக் குட்படுத்தி அவர்க்கு மனைவியர்களானுர்கள். அவர்கள் ஐவர்க்கும் முநிவர் இத்தடாகத்தின் அடியில் வீடுகட்டிவைத்தார். அந்த வீடு இந்தக் குளத்திற்குள் மறைந்திருக்கிறது. தமது தவத்தின் மகிமையாலும் யோகபலத்தாலும் முநிவர் தமது யௌவனத்துக்கு யாதொரு குறைவுமில்லாமல் அம்மனைவிமார்களுடன் இக்குளத்தினடியில் எப்பொழுதும் சுகமாக வாழ்ந்துகொண்டிருக்கிறுர். அவர்கள் களித்திடும் சமயங்களில் வாத்தியங்களின் சத்தமும் அவர்களது இனிய பாட்டொலியும் அவர்கள் ஆபரணவோசையும் மனோகரமாகக் கேட்கின்றன" என்று கூறினர். "வெகு ஆச்சரியம்" என்று மிகக பெருமை பொருந்திய இராமர் அம்முநிவர் சொன்ன சமாசாரத்தைத் தமது தம்பியுடன் கேட்டுக் களித்தார்.

இவ்வாறு கதை சொல்லி முடிய இராமர் தருப்பைகளும் மரவுரிகளும் நிறைந்து பிரமதேஜஸால் விளங்கும் ஆச்சிரமசமூக மொன்றைக் கண்டார். அவர் சீதாலக்ஷ்மணர்களோடு அதனுட் புகுந்து அங்கிருந்த தபசிகளெல்லாராலும் உபசரிக்கப்பட்டு அங்கு வசித்தார். இவ்வாறு தண்டகாரணியத்தில் இருந்த ஆச்சிரம சமூகங்களில் இராமர் சுகமாக ஆங்காங்கு வசித்து அங்கிருந்த

அருந்தவர்களால் பூசிக்கப்பட்டு, மறுபடியும் அவர்களுடைய ஆச்சிரமங்களில் ஒவ்வொன்றிற்கும் போகலானார். மகாவில்லாளியான இராகவர் முதலில் தாம் கொஞ்சநாள் வசித்த ஆச்சிரமங்களுக்கு மறுபடியும் சென்று, சில ஆச்சிரமங்களில் பத்து மாதம், சிலவற்றில் ஒருவருஷம், சிலவிடங்களில் நான்கு மாதம், சில தபோவனங்களில் ஐந்து அல்லது ஆறுமாதம், சிற்சில ஆச்சிரமங்களில் ஒன்றரைமாதம், சிலவாச்சிரமங்களில் அதற் கதிகமானகாலம், சில விடங்களில் மூன்று மாதம், சிலவற்றில் எட்டுமாதம் சுகமாக வசித்தனர். இவ்விதமாக முனிவர்க ளாச்சிரமங்கள்தோறும் ஒருவித குறைவும் உபத்திரவமு மில்லாமல் இராமர் பத்து வருஷகாலம் வசித்தார். பிறகு, அங்கிருந்து திரும்பித் தர்மக்ஞரான இராகவர் மறுபடியும் சுதீக்ஷணருடைய ஆச்சிரமத்துக்கு வந்தார். சத்துருக்களை அடக்கும் வல்லமையுள்ள இராமர் அம்முனிவருடைய ஆச்சிரமத்தை யடைந்து, அவரால் பூசிக்கப்பட்டு, அங்கே சிறிது காலம் வாசம்பணணினார். அவ்வண்ணம் அவ்வாச்சிரமத்தில் அவர் வசித்துக்கொண்டிருந்தகாலத்தில், ஒருநாள் சந்தோஷமாக உட்கார்ந்திருந்த சுதீக்ஷணமாமுனிவரை நோக்கி "ஐயா முனிவரே, இக்காட்டில் முனிபுங்கவராகிய அகஸ்தியமா முனிவர் வசிக்கிறாரென்பதாக அடிக்கடி தபசிகள் தங்களுக்குள் பேசிக்கொள்வதை நான் கேட்டிருக்கிறேன். இக்காடு வெகு விசாலமாகையால் அவரிருக்குமிடம் எனக்குத் தெரியவில்லை. அம்மகானுடைய ஆச்சிரமம் எங்கே உள்ளது? அகஸ்தியமாமுனிவரைக்கண்டு வணங்கவேண்டுமென்று நான் வெகு ஆசைகொண்டிருக்கிறேன். கொஞ்சக்காலம் அவருக்கு நான் தொண்டு செய்யவேண்டுமென்பது என்கருத்து

இராமர் தண்டகாரணியத்தில் வசித்த காலம்.

இராமர் அகஸ்தியராசிரமம் எங்கென்று விசாரித்தது.

தங்கள் அனுக்கிரகத்தால் நானும் தம்பியும் சீதையும் அவரைக்கண்டு வணங்கவேண்டும்" என்று இராகவர் கூறினர். இவ்விதமாகத் தருமாத்துமாவாகிய இராமர் சொன்னசொல்லைச் சுதீக்ஷணமாமுநிவர் கேட்டு வெகு சந்தோஷமடைந்து பின்வருமாறு சொன்னார்.

"நானும் இதே விஷயத்தை, சீதையுடன் சென்று அகஸ்தியரைத் தாங்கள் தரிசிக்கவேண்டுமென்று, தங்களிடமும் லக்ஷ்மணரிடமும் சொல்ல நினைத்திருந்தேன். இதைப்பற்றித் தாங்களே என்னை இப்பொழுது கேட்டது என்ன ஆச்சரியம். ஐயா, அகஸ்தியர் வசிக்கும் ஆச்சிரமத்திற்கு வழியை நான் தங்களுக்குச் சொல்லுகிறேன். இங்கிருந்து நான்கு யோசனை தூரம் தெற்கே சென்றால், அங்கு மகாபெரியவராகிய அகஸ்தியர் தம்பியின் ஆச்சிரமம் காணப்படும். அங்கே பிப்பலிக் காட்டில் கொடிகள் நெருங்கிப் படர்ந்து கிடக்கவும், அநேக புஷ்பங்களும் பழங்களும நிரம்பிய விருக்ஷங்களில் பல வித பறவைகள் மனோகரமாகச் சப்திக்கவும், நிர்மலமான குளிர்ந்த ஜலம் நிறைந்த தாமரையோடைகள் விளங்கவும், அவ்வோடைகளில் அன்னங்கள், நீர்க்காக்கைகள், சக்கரவாகங்கள் முதலிய பறவைகள் விளையாடவும் காண்பீர்கள். அவ்வாச்சிரமத்தில் ஓரிரவுதங்கி, மறுநாள் காலையிலெழுந்து அக்காட்டின் பக்கமாகவே தென்திசைநோக்கி ஒருயோசனை தூரம் சென்றால், தாங்கள் அகஸ்தியமகரிஷியின் ஆச்சிரமம் போய்ச்சேருவீர்கள். அது வெகுவித விருக்ஷங்களடர்ந்த ரமணீயமான பிரதேசத்திலிருக்கின்றது. அதைத் தாங்களும் லக்ஷ்மணரும் சீதையும் பார்த்தால் வெகுவானந்தம் அடைவீர்கள். பெருமைதங்கிய இராமா, அகஸ்தியமாமுநிவரைப் போய்ப் பார்க்கவேண்டுமென்று தங்கள் மனத்தில் தோன்றினால் இன்றைக்கே தாங்கள் அவ்விடத்துக்குப் புறப்படலாம்" என்று

சுதீக்ஷணர் அகஸ்தியர் ஆச்சிரமத்திற்கு வழி கூறல.

சுதீக்ஷண முனிவர் சொன்னதை இராமர் கேட்டு உடனே எழுந்து அம்முனிவரை வணங்கி லக்ஷ்மணரோடும் சீதையோடும் அகஸ்தியமாமுனிவருடைய ஆச்சிரமத்துக்குப் புறப்பட்டார். சுதீக்ஷணர் சொன்னவழியே அழகான அநேக காடுகளையும், மேகங்கள்போன்ற அநேக மலைகளையும், ஆங்காங்கு வழியிலிருந்த அநேக ஆறுகளையும், ஓடைகளையும் பார்த்து மகிழ்ந்துகொண்டு அவர்கள் சுகமாக வழிநடந்தார்கள். அப்பொழுது வெகு சந்தோஷமாகத் தனது தம்பியைப்பார்த்து இராமர் சொன்னார்:

இராமர் அகஸ்தியர் ஆச்சிரமம் செல்லல்.

"இதோ நாம் காண்கிறோமே, இந்த ஆச்சிரமந்தான் வெகு புண்ணியங்களைப் பண்ணிக்கொண்டிருக்கும் மகாத்துமாவாகிய அகஸ்தியர் தம்பியினுடைய ஆச்சிரமம்; இது நிச்சயம். பழங்களின் பாரத்தாலும் புஷ்பங்களின் பாரத்தாலும் வளைந்து ஆயிரக்கணக்காக இவ்வழியில் நிற்கும் விருக்ஷங்கள் நான்கேட்டபடி அவ்வாச்சிரமத்தின் அடையாளங்களாகும். பழுத்த பிப்பலியினுடைய வாசனையால் காட்டிலிருந்து அடிக்கும்காற்றுக் காரமாக இருக்கிறது. ஆங்காங்கு அடுக்கிவைக்கப்பட்ட கட்டைக் குவியல்கள் காணப்படுகின்றன. அன்றியும், கிள்ளப்பட்ட தருப்பைகள் வைடூரியம்போலப்பிரகாசிக்கின்றன. அதோ கார்மேகத்தின் சிகரம் போல் கிளம்பிக்கொண்டிருக்கும் புகை இக்காட்டிலிருக்கும் ஆச்சிரமத்தில் மூட்டப்பட்ட நெருப்பின் புகையாகவேண்டும். அங்கங்கே தீர்த்த கட்டங்களில் ஸ்நானம் பண்ணிவிட்டு அந்தணர்கள் அநேகர் தனித்தனியாகத் தாங்களே பறித்துவந்த புஷ்பங்களினால் பூஜை செய்துகொண் டிருக்கிறார்கள். சுதீக்ஷணர் சொன்ன அடையாளங்களினால் இது நிச்சயமாக அகஸ்தியமுனிவரின் தம்பியினுடைய ஆச்சிரமமாகத்தான் இருக்கவேண்டும். அம்மகானாகிய அகஸ்தியர்

அகஸ்தியர் தம்பியின் ஆச்சிரமம்.

தான் இவ்வுலகத்துக்கு நன்மைசெயயும்பொருட்டு இங்கிருந்த யமனுடைய உபத்திரவத்தை நீக்கி இத்தென்திசையையும் சுகமாக வசிக்கும்படியான திசையாகத் தமது தவவலிமையால் செய்துவைத்தார். முன்னொரு காலத்தில் இவ்விடத்திற்றான் இல்வலன் வாதாபி என்ற இரண்டு அசுரர்கள், சகோதரர்கள், பிராமண வதைசெய்பவர்கள், வசித்தார்கள். அவர்களுள் இல்வலன் என்ற அசுரன் பிராமண வேஷம் பூண்டு, ஸமஸ்கிருத பாஷை பேசிக்கொண்டு, கொஞ்சங்கூடத் தயை யில்லாமல், வழியில் போகும் பிராமணர்களைச் சிராத்தத்திற்கு வந்து புசித்துப்போக அழைப்பான். அவர்கள் அதற்கு ஒப்புக்கொண்டவுடன் அவன் தன் தம்பியை ஒரு ஆடாக மாற்றி அவ்வாட்டைப் பிடித்துச் சமையல்செய்து மந்திரப்பிரகாரம் சிராத்தம் பண்ணி, வந்த அந்தணர்களுக்குச் சிராத்தபோஜனம் அளிப்பான். அதை அவர்கள் திருப்தியாகப் புசித்து உட்கார்ந் திருக்கையில், இல்வலன் பெருங்குரலிட்டு "அடே வாதாபீ, ஓடிவா சீக்கிரம்" என்று கூப்பிடுவான். அவ்வாறு கூப்பிடுந் தனது தமையன் குரல்கேட்ட வாதாபி ஆடுபோலக் கத்திக்கொண்டு அந்தணர்களுடைய வயிற்றைப் பீறிக்கொண்டு புறப்பட்டுத் தனதுருவம் எடுத்துவந்து நிற்பான். இவ்விதமாகக் காமரூபிகளாகிற இப்பிசிதவுணர்களால் ஆயிரக்கணக்கான அந்தணர்கள் இவ்விடத்தில் கொலைசெய்யப் பட்டார்கள். இப்படி நடந்துகொண்டிருந்தகாலத்தில் உலகத்தை இவ்வுபத்திரவத்திலிருந்து நீக்கத் தேவர்கள் அகஸ்தியரைப் பிரார்த்தித்தார்கள். அப்பொழுது அகஸ்தியர், ஒருநாள் இல்வலனுடைய சிராத்தத்தில் சாப்பிடுவதாக ஒப்புக்கொண்டு, தம்மிலையில் போடப்பட்ட வாதாபியைப் புசித்து விட்டார். 'எல்லாந் தங்களிஷ்டப்படி புசித்தீர்களா' என்று அசுரன்கேட்க, முனிவரும் அப்படியே புசித்தாய்

இல்வலன் வாதாபிகதை.

விட்டதென்றூர். அவ்வாறு அவர் திருப்தியடைந்ததற் கடையாளமாகச் சாஸ்திரப்படி இல்வலன் அவர் கையில் கொஞ்சம் தீர்த்தம் வார்த்தான். எல்லாம் முடிந்தபின் தனது வழக்கப்படி இல்வலன் 'வாதாபீ, ஓடிவாசீக்கிரம்' என்று கூப்பிட்டான். அவ்வாறு கூப்பிடுங் கொடிய பிரமஹத்தி பண்ணிவரும் அசுரனைப்பார்த்து, புத்திமானுகிய முநிவர்களுக்குள் உத்தமரான அகஸ்தியமுநிவர் சிரித்து 'யான் உண்டுவிட்ட ராக்ஷஸன் எங்கிருந்து திரும்பிவரப்போகிறுன்? ஆட்டுருவங்கொண்ட உன்தம்பி முன்னரே யமன்வீடு சென்றுவிட்டான்' என்று சொன்ஞர். இவ்வாறு தன்தம்பி நாசமடைந்துவிட்டதாக முநிவர் சொன்னசொல்லை அவ்வசுரன் கேட்டு வெகு கோபங்கொண்டு அவரை எதிர்க்க ஆரம்பித்தான். அவரை ஒரேயடியாக அடித்துவிடக் கருதி அவன் அவரைநோக்கி ஓடினுன். அக்கினிபோல் விளங்கிக்கொண் டிருக்கும் அம்முநிவர் தமது அக்கினிக்கொப்பான கண்ணுல் அவனை ஒரு நொடியில் எரித்துவிட்டார். இவ்வாறு எவரொருவர், தாம் பிராமணர்கள்மேல் வைத்திருந்த அருளால், இவ்வித அசாத்தியமான காரியம் பண்ணினுரோ அப்படிப்பட்டவருடைய தம்பியின் ஆச்சிரமம் இதோ தடாகங்களும் சோலைகளும் செறிந்து விளங்குவது." இவ்வண்ணம் இராமர் லக்ஷ்மணரிடஞ் சொல்லிக்கொண் டிருக்கும்பொழுது சூரியன் அஸ்தமனமாயினுன். உடனே சந்தியாகாலமும் வந்தது. இராமர் தம்தம்பியுடன் சாஸ்திரப்பிரகாரம் சாயம்சந்தியை உபாசித்து ஆச்சிரமத்துள் புகுந்து முநிவரை வணங்கினுர். முநிவரால் நன்ருக உபசரிக்கப்பட்டுப் பழங்களையும் கிழங்குகளையும் புசித்து இராமர் அவ்விடத்தில் அவ்விரவைக் கழித்தார். அவ்விரவு கழிந்து சூரியன் உதயமானவுடன், இராகவர் அகஸ்தியருடைய தம்பியினிடம் விடைப்பெறச் சென்று "பகவானே, நான்

இல்வலன் வதை.

தங்களை வணங்குகிறேன். தங்களாச்சிரமத்தில் சுகமாக நா ளிரவைக் கழித்தேன். இனி எங்களுக்கு விடைகொடுக்க வேண்டும். தங்களுடைய தமையனாரைப் பார்க்கப்போக வேண்டும்" என்றார். "போய்வாருங்கள்" என்று முனிவர் சொல்ல, இராமா அவ்விடம்விட்டுப் புறப்பட்டு, குறிக்கப் பட்ட வழியே நடந்தார். கடம்பு, பலா, ஆச்சா, வேங்கை, மகிழ், தவம், சிரிவில்வம், இருப்பை, வில்வம், திந்துகம் முதலான மரங்கள வழிகளிலெல்லாம் நன்றாகப் பூத்தும் பூங்கொத்துக்கள் நிறைந்த கொடிகள் படரப்பெற்றும் நிற்க வும், அநேக காட்டுமரங்கள் யானைத்துதிக்கைகளால் கசக் கப்பட்டும், வானரக்கூட்டங்களால் விளககமுற்றும் மதர் த்த பறவைக்கூட்டங்கள் உல்லாசமாக உட்கார்ந்து கூவப் பெற்றும நிற்கவும் இராமர் கண்டார். தம்மைப் பின்தொ டர்ந்துவரும் நன்மையை விருத்திசெய்பவராகிய லக்ஷ்மண ரைப்பார்த்து இராமா "லக்ஷ்மணா, இவ்விடத்தில் விருக்ஷ ங்கள் அடர்ந்து பசேலென்று தழைத்திருக்கின்றன. மிரு கங்களும் பறவைகளும் பழகினவைகள்போல வெகுசாது வாக இருக்கின்றன. ஆகையால், பரிசுத்தமான ஆத்துமா வையுடைய அகஸ்தியரது ஆச்சிரமம சமீ பத்தில் உளதுபோலும். களைத்தவர்கள் இளைப்பைப் போக்கும் இந்த ஆச்சிரமம் தம்முடைய செயல்களினால் அகஸதியர் என்ற பெயர் பெற்று உலகத்தில் புகழ்படைத்த மாமுநிவருடைய ஆச் சிரமமாகத்தான் இருக்கவேண்டும். அது ஓமாக்கினியின் புகை மேலெழுமப, மரவுரிகளும் மாலைகளும் அழகுசெய்ய, சாந்தமான அநேக மானினஙகள நிற்க, பலவித பறவைகள் சத்திக்க விளங்குகின்றது. எவரொருவருடைய மகிமை யால் இன்றைக்கு அரக்கர்கள் இந்தத் தென்திசையைக் கண்ணெடுத்துப்பார்த்து உட்புக நடுங்குகிறார்களோ அம் முநிவருடைய ஆச்சிரமமது. மகா புண்ணியசாலியாகிய அவர் இந்தத் திசைக்கு வந்ததுமுதல் இத்திசையில் ராக்ஷ

அகஸதியர் ஆசசிரமம்.

சர்கள் தங்கள் பகைமை நீங்கிச் சாந்தமுள்ளவர்களாய்விட்டார்கள். அவர் பெயரைக்கொண்டே இத்தென்திசையும் அகஸ்தியர் திசையென்று வெகு சாந்தமான பெயர் பெற்று மூவுலகத்திலும் பிரசித்தி அடைந்து கொடியவர்கள் அஞ்சும் திசையாய் விளங்குகிறது. வணக்கமுடைய அநேக ஜனங்களால் அடையப்பட்ட இப்புண்ணியாச்சிரமம் சூரியன் செல்லும் வழியை மறிக்கக்கிளம்பின விந்திய பருவதம் தமது உத்தரவுக்குள்ளடங்கி வளராமல் அப்படியே நின்று கொண்டிருக்கச்செய்து உலகத்தில் கீர்த்தி பெற்ற, தீர்க்காயுளையுடைய அகஸ்தியமாமுனிவருடையது. அவர் எப்பொழுதும் சாதுக்கள் க்ஷேமத்தையே கருதுபவர்; உலகத்தா ரெல்லாராலும் ஆராதிக்கப்படுபவர். நாம் அவரைக் கண்டால் நமக்கும் அவர் நன்மையையே பண்ணிவைப்பார். நான் இவ்விடத்தில் அகஸ்திய மாமுனிவரை வணங்குவேன். நான் செய்யவேண்டிய வனவாசத்தில் எஞ்சிநிற்கும் நாட்களை இவ்விடத்திலேயே கழிப்பேன். இவ்விடத்திற்றான் எப்பொழுதும் நியதமான ஆகாரம் பண்ணிக்கொண்டிருக்கும் அகஸ்தியமுனிவரைத் தேவர்கள், கந்தர்வர்கள், சித்தர்கள், மற்றுமநேக முனிவர்கள் எல்லாரும் உபாசித்துவருகிறார்கள். இவ்விடத்தில் பொய்யுரைப்போன், கொடியவன், இம்சிக்கிறவன், மனம் போன வழியே செல்லும் கெட்ட நடக்கை யுள்ளவன் ஒருவனும் வாசம்பண்ண முடியாது. ஏனெனில் இம்முனிவர் மிக்க சக்தியுள்ளவர். இவ்விடத்தில் தேவர், இயக்கர், நாகர், பதகர் எல்லாரும் நியதமான ஆகாரம் பண்ணிக்கொண்டு தர்மத்தை ஆராதித்துக்கொண்டிருக்கிறார்கள். இவ்விடத்தில், மகாத்துமாக்களாகிய சித்தர்கள் தங்கள் உடம்பை ஒழித்துவிட்டுச் சூரியனுக் கொப்பான விமானத்தில் ஏறிக்கொண்டு சுவர்க்கலோகம் போகிறார்கள். நல்ல கருமங்களினால் ஆராதிக்கிற பிராணிகளுக்குத் தேவர்கள் இயக்கபதவியையும், தேவபதவியை

யும், அநேகவித ராச்சியங்களையும் இவ்விடத்தில் கொடுக்கிறார்கள். அப்பா லக்ஷ்மணா, நாம் இதோ அகஸ்தியமாமுநிவருடைய ஆச்சிரமத்துக்கு வந்துவிட்டோம். நீ முன்னேபோய் நான் சீதையுடன் இங்கு வந்திருப்பதாக மகரிஷிக்குத் தெரியப்பண்ணு" என்று கூறினார்.

பன்னிரண்டாஞ்சருக்கம்.

இராமர் அகஸ்தியரைச் சந்தித்து அவரிடமிருந்து விஷ்ணுபாணம், வான் முதலியவைகள் பெறுதல்.

இராகவருடைய தம்பியாகிய லக்ஷ்மணர் அவவாச்சிரமத்துள் புகுந்து அங்கிருந்த அகஸ்தியமுநிவரின் சிஷ்யர்களி லொருவரைக் கண்டு அவரிடம் பின்வருமாறு கூறினார்:—

லக்ஷ்மணர் அகஸ்தியருக்கு இராமர் வரவு தெரிவித்தல்.

"தசரதரென்னும் மன்னவரொருவரிருந்தார். அவருடைய மூத்தகுமாரராகிய பலசாலியான இராமர் அகஸ்திய மாமுநிவரைப் பார்ப்பதற்காகத் தமது மனைவி சீதையுடன் வந்திருக்கிறார். அவருடைய தம்பி நான்; லக்ஷ்மணன் என்பது என்பெயர்; எப்பொழுதும் அவரிடம் பக்திவைத்து அவரது நன்மையே நாடி நடப்பவன். எங்களைப்பற்றி நீங்கள் கேள்வியுற்றிருக்கலாம். நாங்கள் இப்பொழுது எங்கள் தந்தையின் கட்டளையால் இந்தப் பயங்கரமான வனத்துக்கு வந்திருக்கிறோம். நாங்கள் அம்மகானைப் பார்க்க விரும்புகிறோம். அதைத் தாங்கள் அவரிடந் தெரியப்படுத்தவேண்டும்." அத்தபசி லக்ஷ்மணர் சொன்ன சொல்லைக் கேட்டு அப்படியே யாகட்டுமென்று சொல்லி அச் சங்கதியை அகஸ்திய மாமுநிவரிடந் தெரிவிக்கும்பொருட்டு அவரிருந்த அக்கி

னிஹோத்திர சாலைக்குள் புகுந்தார். அங்கே சென்று தமது தவத்தின் மகிமையால் உவமை நீங்கியொளிரும் அகஸ்தியமாமுநிவரை அச்சீஷர் கண்டு இராமர் வந்திருப்பதாகத் தமக்கு லக்ஷ்மணர் உரைத்ததைத்தெரிவித்து "தசரதருடைய புத்திரர்களாகிய இராமலக்ஷ்மணர்கள் சீதாதேவியுடன் இந்த ஆச்சிரமத்துக்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் தங்களைத் தரிசித்துத் தங்களுக்குத் தொண்டு செய்ய விரும்புகிறார்கள். இனிமேல் நான் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதைக் கட்டளையிடக் கேட்டுக் கொள்ளுகிறேன்" என்று விண்ணப்பஞ் செய்தார். இவ்விதமாக இராமரும் லக்ஷ்மணரும் சீதையும் வந்திருப்பதாகச் சிஷ்யர்மூலமாகக் கேட்ட அகஸ்திய மாமுநிவர் அவரைப் பார்த்து "நெடுநாளாளும் இராமர் என்னைப் பாக்கவந்தது நன்று. நான் என் மனத்தில் அவர் என்னிடம் வரவேண்டுமென்று கருதினேன். சீக்கிரம் நீ சென்று இராமரை அவர்மனைவியோடும் லக்ஷ்மணரோடும் அவரவர்களுக்குச் செய்யவேண்டிய மரியாதைகளைச் செய்து என் முன் அழைத்துவா. என்னை வந்துகேட்பதற்கு முன்னரேயே ஏன் நீ அவர்களை அழைத்துவந்திருக்கக் கூடாது" என்றார்.

அகஸ்தியர் இராமரை அழைத்தல்.

இவ்வண்ணம் அந்த மகாத்துமாவும் தர்மக்ஞருமான முநிவர் உத்தரவுசெய்ய, சிஷ்யர் "அப்படியே யாகட்டும்" என்று கைகூப்பிப் பணிந்து விரைந்து வெளியில் வந்து லக்ஷ்மணரைக்கண்டு "இராமர் எங்கே? சீக்கிரம் முநிவரைப்பார்க்க வரலாம்" என்றனர். உடனே அந்தச் சீஷரை அழைத்துக்கொண்டு லக்ஷ்மணர் அவ்வாச்சிரமத்தின் வாயிலிற்சென்று, அங்கிருந்த இராமரையும் சீதையையும் அவருக்குக் காணபித்தார். இராமரைக்கண்டவுடன் அச்சீஷர் வெகு வணக்கமாக அகஸ்தியமாமுனிவர் சொன்ன சமாசாரத்தைத் தெரிவித்து எவ்வித மரியாதை

களுக்கும் யோக்கியராகிய இராமரைத் தக்கபடி உபசரித்து ஆச்சிரமத்துக்குள் அழைத்துக்கொண்டு போனார். இராமர் சீதாலக்ஷ்மணர்களோடு, மிக்க சாந்தமான மான்கூட்டங்கள் நிரம்பியுள்ள அவ்வாச்சிரமத்தின் அழகைப் பார்த்துக்கொண்டு அதனுட் புகுந்தார். அவ்விடத்தில் இராமர் அம்முனிவருடைய தேவபூஜாகிரகத்தில் நுழைந்து அங்கே பிரமதேவரைப் பூசைசெய்யுமிடம், அக்கினியினிடம், விஷ்ணுவினிடம், மகேந்திரனினிடம், சூரியனினிடம், சந்திரனினிடம், சிவபூஜை பண்ணுமிடம், குபேரனினிடம், தாதாவினிடம், விதாதாவினிடம், வாயுவினிடம், ஸர்ப்பராஜனாகிய ஆதிசேஷனினிடம், காயத்திரியினிடம், வசுக்களினிடம், கையில்பாசம்பிடித்த வருணனினிடம், சுப்பிரமணியரினிடம், தர்மதேவதையினிடம் ஆகிய எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டுபோனார். இப்படி அவர் சென்றுகொண்டிருக்கும்பொழுது தமது சிஷ்யகூட்டங்கள் சூழ அகஸ்தியமாமுனிவரும் இராமரைப் பார்க்க எதிர்வந்தார். ஜ்வலிக்குங்காந்தியால் விளங்கும் முனிவர் முனிவர்களுக்கு முதலில் வர இராமர் கண்டார். உடனே அவர், திருவளர்க்கும் தமது தம்பியாகிய லக்ஷ்மணரைப்பார்த்து "அப்பா லக்ஷ்மணா, முக்காலங்களையும் உணர்ந்த அகஸ்தியமாமுனிவர் அதோ வருகிறார். அவரிடம் விளங்கும் காமவீரியத்தாலேயே தவத்துக்கே அவரிருப்பிடம் என்று நான் நினைக்கிறேன்" என்றார். சூரியன்போலத் தமது காந்தியால் விளங்கும் அகஸ்திய முனிவரைக்குறித்து லக்ஷ்மணரிடம் இவ்வண்ணஞ்சொல்லி, அவரைக் கண்டதால் வெகுசந்தோஷம் அடைந்தவராகி, இராமர் அவர் பாதங்களில் வணங்கினார். தமது மனைவி சீதையுடனும், தம் தம்பி லக்ஷ்மணருடனும், இராமர் முனிவரைப் பணிந்து எழுந்து கைகூப்பி வணங்கி நின்றார். அகஸ்தியர் அப்பொழுது இராமரை ஆனந்தத்தால்

இராமர் அகஸ்தியர் ஆச்சிரமத்துள் நுழைதல்.